காலை முரசு

பக்கங்கள்:-28

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 17 | புதன்கிழமை | 01.01.2025 | அதிர்வு 152

வாசகர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் 2025 - 'முரசு' குழுமம்

மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள்

# தமிழரசுக் கட்சியை முடக்கச் சதி முயற்சி

## மாவை கடும் குற்றச்சாட்டு



"கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சிலர் இலங்கைத் தமிழரசுக் கட்சியை முடக்குவதற்குத் திரைமறைவில் சதி

06

# மண்மேடுடன் மோதிய வான் இருவர் சாவு; 14 பேர் காயம்

## ஹப்புத்தளையில் துயரம்



பதுளை – கொழும்பு பிரதான வீதியில் ஹப்புத்தளை – விஹாரகல பகுதியில் நேற்று வான் ஒன்று விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

06

# தமிழரசின் மீளெழுச்சிக்கு ஒற்றுமை மிகவும் அவசியம்

## கட்சியில் இணையுமாறு இளையோருக்கு சி.வி.கே. அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

"இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படவேண்டியதேவைஏற்பட்டுள்ளது.அவ்வாறுசெயற்படுவதன் ஊடாகவே அடுத்து வரும் தேர்தல்களில் தமிழரசுக் கட்சி மீளெழுச்சி பெறும்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

06



# மொட்டுக் கட்சி மீண்டெழுமாம்

## இப்படி மஹிந்த நம்பிக்கை



"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி படுதோல்வியடைந்துவிட்டது, அதற்கு இனி எதிர்காலம் இல்லை

06

# வவுனியாவில் பஸ் மோதி 7 வயது சிறுவன் மரணம்!

(கி.வசந்தன்)

வவுனியா, பாவற்குளம்பகுதியில் சைக்கிள் மீது தனியார் பஸ் மோதியதில் 7 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா,

06






நீண்ட காலமாகத் தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தலை இந்த ஆண்டு (2025) நடுப்பகுதியில் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்றும், அதற்கு வசதி செய்யும் தேர்தல் சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் பிரதி அமைச்சர் பிரபா ருவான் செனரத் தெரிவித்திருக்கின்றார்.

ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தொடர்ந்து, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான சட்டப் பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றப்படும் என்று அரசுத் தரப்பில் இப்போது குறிப்பிடப்படுகின்றது.

மாகாண சபைகள் தேர்தல் 2025ஆம் ஆண்டின் இறுதியில் நடத்தப்படும் என்று புதிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அண்மைக் காலம் வரை கூறி வந்தார். இலங்கை தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த சமயமும் 2025 ஆம் ஆண்டு

05




# மக்களின் கனவுகளை நனவாக்கியே தீருவோம்

## புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி சபதம்

"இந்த நூற்றாண்டின் தவறவிட்ட சாதனைகளை மீண்டும் நாட்டுக்கு வென்று கொடுக்கவும், மக்களின் கனவுகளை நனவாக்கவும், 2025ஆம் ஆண்டு புத்தாண்டில் மேலும் வீரியத்துடனும் உறுதியுடனும் அர்ப்பணிக்க நடவடிக்கை எடுப்போம்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"நாடும் நாட்டு மக்களும் பல தசாப்த காலமாகக் கண்ட நல்ல கனவுகள் நனவாகும் புதிய யுகத்தின் உதயத்துடன், 2025 புத்தாண்டில் இலங்கையர்களாகிய நாம் அடியெடுத்து வைக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளையும் இணைத்து அனைத்து மக்களின் நம்பிக்கையையும் பெற்று 2024ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைக்க எம்மால் முடிந்தது. அதற்கிணங்க, மக்கள் எதிர்பார்க்கும் சிறந்த ஆட்சியொன்றை உருவாக்கும் நோக்கில் அன்றிருந்த அரசியல் கலாசாரத்தில் பாரிய மாற்றத்தை மேற்கொண்டு, மக்கள் ஆணையின் பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் தற்போது துரிதமாகச் செயற்பட்டு வருகின்றோம்.

கிராமிய வறுமையை ஒழித்தல், 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் ஆகியவை நாட்டின் முன்னணி அபிவிருத்தித் தேவைகளாக நாம் அடையாளம் கண்டுள்ளோம். அந்தப் பின்னணியில் சமூக, சுற்றாடல் மற்றும் நெறிமுறை புத்தெழுச்சியின் ஊடாக சமூகத்தை மேலும் மேம்பட்ட நிலைக்கு உயர்த்தும் நோக்கில் "கிளீன் ஸ்ரீலங்கா" வேலைத்திட்டம் புத்தாண்டு உதயத்துடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தப் பரிமாற்ற ரீதியான அபிவிருத்திச் செயற்பாடுகளின் ஊடாக நாடென்ற ரீதியில் நாம் 2024 ஆம் ஆண்டில் நாம் அடைந்த பொருளாதார ஸ்திரத்தன்மையை மேலும் உறுதிப்படுத்த இருக்கின்றோம். அனைவருக்கும் "வளமான நாடு – அழகான வாழ்வை" பெற்றுக்கொடுப்பதற்காக புதிய மனப்பாங்குகளை மேம்படுத்தி,புதிய உறுதிப்பாடுகளை மனதில் கொண்டு சகோதரத்துவத்துடன் முன்னோக்கி வருவதற்கு 2025 புதுவருட உதயத்துடன் சிறந்த வாய்ப்பு உருவாகியிருப்பதாக நான் உறுதியாக நம்புகின்றேன்.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் நேய அரசை உருவாக்கி, அனைத்து மக்களும் ஒன்றிணைந்த அபிவிருத்தியடைந்த இலங்கை பற்றிய கனவை நனவாக்கும் வாய்ப்பு உங்களுக்கும் எமக்கும் கிடைத்துள்ளது. விட்டுக்கொடுக்க முடியாத இந்தப் பாரிய பொறுப்பு நம் அனைவரின் தோள்களிலும் சுமத்தப்பட்டுள்ளது. அந்தப் பொறுப்பு குறித்து எங்களுக்கு நல்ல புரிதல் உள்ளது. இந்த நூற்றாண்டின் தவறவிட்ட சாதனைகளை மீண்டும் நாட்டுக்கு வென்று கொடுக்கவும், மக்களின் கனவுகளை நனவாக்கவும், 2025ஆம் ஆண்டு புத்தாண்டில் மேலும் வீரியத்துடனும் உறுதியுடனும் அர்ப்பணிக்க நடவடிக்கை எடுப்போம்.

தேசிய மறுமலர்ச்சிக்காக எங்களுடன் இணைந்து பங்காற்றும் உங்கள் அனைவருக்கும் செழுமையும் ஒற்றுமையும் புதிய நம்பிக்கையும் நிறைந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!" – என்றுள்ளது.

# யாழில் மயங்கி வீழ்ந்து இளம் குடும்பஸ்தர் சாவு

(எஸ்.ரகுதீஸ்)

யாழ். கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு கிழக்கு பகுதியில்

திடீரென மயங்கிய இளம் குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த கிருபரஞ்சன் (வயது 38) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை தனியார் கல்வியில் நிலையத்துக்கு மகளை ஏற்றுவதற்காக மோட்டார் சைக்கிள் எடுக்கச் சென்றவர் திடீரென ஓடி வந்து மயங்கி வீழ்ந்துள்ளார். இதனையடுத்து அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியாசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது அங்கு உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

# முதன்மை பணவீக்கம் டிசம்பரில் அதிகரிப்பு

கொழும்பு நுகர்வோர் விலை சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் கடந்த நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் டிசம்பர் மாதத்தில் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த நவம்பர் மாதத்தில் மறை 2.1 சதவீதமாக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் டிசம்பர் மாதத்தில் மறை 1.7 சதவீதமாக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அதேநேரம், கடந்த நவம்பர் மாதம் 0.6 வீதமாக இருந்த உணவு பணவீக்கம் இந்த மாதம் சிறியளவு அதிகரித்து 0.8 சதவீதமாகப் பதிவாகியுள்ளது.

அத்துடன், நவம்பர் மாதத்தில் மறை 3.3 சதவீதமாக இருந்த உணவல்லா பணவீக்கம் டிசம்பரில் மறை 3 சதவீதமாக உயர்வடைந்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் அறிவித்துள்ளது.




அனைவருக்கும்
இனிய
புதுவருட
நல்வாழ்த்துகள்
2025
Ruhbins
Hospital
Ruhbins Hospital (PVT) LTD
No 160 Pointpedro Road, Nelliady,Jaffna
Hotline +94 77 248 6642



# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு விரைவில் வெளியிடப்படும்

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை ஆராய்ந்து, அது தொடர்பில் விரைவில் அடுத்த கட்ட தீர்மானம் எடுக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அண்மையில் நிறைவடைந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளில் கசித்த 3 வினாக்களுக்குப் புள்ளிகளை வழங்குவதற்கு பரீட்சைகள் திணைக்களம் மேற்கொண்ட தீர்மானத்தை வலுவற்றதாக்கி உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

அத்துடன், இந்த சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட விசேட குழு முன்வைத்துள்ள பரிந்துரைகளில் மிகவும் பொருத்தமான ஒன்றை நடைமுறைப்படுத்துமாறும் உயர்நீதிமன்றம் பரீட்சைகள் திணைக்களத்துக்கு நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்தநிலையில், இந்த விடயம் தொடர்பில், கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர, உயர் நீதிமன்றின் உத்தரவு தொடர்பில் ஆராயப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அவற்றை கருத்திற்கொண்டு மிக விரைவில், புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளையும் வெட்டுப்புள்ளிகளையும் வெளியிடுவதற்கு எதிர்பார்ப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இறுதியில்தான் மாகாண சபை தேர்தல் என்று அவர் கூறியிருந்தார்.

ஆனால், இப்போது பிறந்த புத்தாண்டின் நடுப்பகுதியில் – சற்று முற்கூட்டியே – அதனை நடத்துவது குறித்து அரசுத் தரப்பில் இருந்து செய்திகள் வெளியிடப்படுகின்றன.

உண்மைதான். மேற்படி விடயங்கள் அடங்கிய தனது அரசியல் நிகழ்ச்சி நிரலை தேசிய மக்கள் சக்தி அரசு மாற்றி அமைத்திருப்பதாக செய்திகள் கிடைத்து உள்ளன.

அதன்படி, உள்ளூராட்சித் தேர்தல்களை முதலில் நடத்தும் அதே சமயம், முன்னைய அரசுகளின் காலத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள், முறைகேடுகள் குறித்து தீவிரமான விசாரணைகளை நடத்தி, உண்மைகளை அம்பலப்படுத்தவும், பொருளாதாரச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தி, விலைவாசியை கட்டுப்படுத்தி, புதிய ஆட்சி தொடர்பில் மக்கள் மனதில் ஸ்திரநிலையை ஏற்படுத்தவும் முன்னுரிமையும் முக்கியத்துவமும் அளிக்க அரசு தலைமைத் திட்டம் வகுத்திருக்கின்றது.

அதனை அடுத்து மாகாண சபை தேர்தல் நடத்தப்படும்.

உள்ளூராட்சித் தேர்தல், மாகாண சபை தேர்தல், பொருளாதார நிலைமையை கட்டுக்குள் கொண்டு வருதல், முன்னைய அரசு கால மோசடி – ஊழல்கள் தொடர்பில் கட்டுறுதியான நடவடிக்கை எடுத்தல் ஆகிய நான்கு விடயங்களையும் உள்ளடக்கிய தனது இலக்கு திட்டத்தை அரசு தலைமை வகுத்திருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இவற்றை இந்த ஆண்டு இறுதிக்குள் உறுதிப்படுத்திக் கொண்டு, அதன்பின்னரே புதிய அரசமைப்பு உருவாக்க நடைமுறைக்குள் கால் வைப்பது என்று ஜனாதிபதியும் அவரது நெருங்கிய கட்சி சகாக்களும் ஒன்று கூடி முடிவெடுத்திருக்கிறார்கள் எனக் கூறப்படுகின்றது.

அதன் பிரகாரம் புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கான பிள்ளையார் சுழி நடவடிக்கைகள் அடுத்த ஆண்டில் – 2026 இல்தான் – ஆரம்பமாகும் எனத் தெரிகிறது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கான கட்டமைப்புகள் அடுத்த ஆண்டில் – 2027 இல் – தொடங்கினாலும் அது தொடர்பில் மக்கள் கருத்துக்களை உள்வாங்கி, மக்கள் மன்றத்தில் அது குறித்துப் பொது விவாதங்களை நடத்தி, ஆராய்ந்து, அரசமைப்பு நகலை உருவாக்கி, நாடாளுமன்றத்திலும், பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களிடத்திலும் அனுமதி பெறுவதற்கு மேலும் இரண்டு ஆண்டுகள் தேவைப்படும் என்று அரசு வட்டாரங்கள் கருதுகின்றன. இதன் அடிப்படையிலேயே இந்தத் திட்டம் பூர்த்தியாக இப்போதிருந்து மூன்று ஆண்டுகள் செல்லும் என்ற வரையறை – கருத்து – அரசு தலைமையால் முன்வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

\+ + +

அநுர அரசின் தேர்தல் காலத்து வாக்குறுதி காற்றில் பறக்க விடப்பட்டு, சேவை மூப்பு புறந்தள்ளப்பட்டு, ஒருவரை யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரச அதிபராக நியமித்த விடயம் குறித்து நேற்று இப்பகுதியில் தந்திருந்தோம்.

‘ஆறு கடக்கும் வரையில்தான் அண்ணன் தம்பி, அதன் பின்பு நீயாரோ, நான் யாரோ’ – என்ற பழமொழி ஆட்சியாளர்கள் அனைவருக்கும் பொருந்தும் என்பதனை அநுர அரசும் நிரூபிக்கின்றது என்பதனையும் குறிப்பிட்டோம்.

இந்த விடயத்தில் பாதிக்கப்பட்ட நிர்வாக சேவை தரம் ஒன்றைச் சேர்ந்த அதிகாரிகள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தேர்வான தேசிய மக்கள் சக்தியின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆளுநர் வரையில் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

இதனால் ஆளுநர் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபராக நியமிக்கப்பட்டவரை விட சேவை மூப்பில் உள்ளவர்களின் விவரத்தை அவசரமாக அமைச்சிற்கு அனுப்பி வைத்துள்ளார் எனத் தற்போது தகவல் வெளிவருகின்றது.

இந்த விடயத்தில் பாதிக்கப்பட்ட அலுவலர்கள் அனைவரும் ஒரே குடையின் கீழ் நிற்பதனால் அரசும், அமைச்சும் திணறுகின்றன எனத் தெரிகின்றது.

## மொட்டுக் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

என்று எவரும் கனவு காணக்கூடாது. எமது கட்சி விரைவில் மீண்டெழும்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜ பக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"மொட்டுக்கட்சியை எவராலும் சிதைக்க முடியாது. அது மீண்டெழும்.

எதிர்வரும் தேர்தல்களில் எமது கட்சி பலத்தைக் காட்டும். பொய் வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்தவர்களுக்கு எதிர்வரும் தேர்தல்களில் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

மொட்டுக் கட்சி தற்போது ஆட்சியில் இல்லாததன் அருமையை மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள். எமது கட்சி மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும். மக்கள் நிம்மதியாக வாழும் சூழலை ஏற்படுத்துவோம்."

– என்றார்.

---

## மண்மேடுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அந்த வானில் பயணித்த 14 பேர் காயமடைந்த நிலையில் ஹப்புத்தளை மற்றும் தியத்தலாவை வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ப்ரேக் தொகுதி தொழிற்படாமையால், குறித்த வான் மண்மேடு ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹப்புத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

## தமிழரசுக் கட்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். அவர்களே எனது தலைவர் பதவியைப் பிடுங்குவதில் குறியாக இருந்தார்கள்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும் கட்சியின் தற்போதைய அரசியல் குழுத் தலைவருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஊடகம் ஒன்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"குறுக்கு வழியில் தமிழரசுக் கட்சிக்குள் நுழைந்தவர்கள், தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கட்சி இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றார்கள். அவர்களின் சுயநல நடவடிக்கைகளால்தான் எமது கட்சி பலவீனமானது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியை முடக்க வேண்டும் என்று தென்னிலங்கை விரும்பியது. ஆனால், நானும் முன்னாள் தலைவர் சம்பந்தனும் தமிழரசுக் கட்சியைப் பல்வேறுசவால்களுக்குமத்தியில்பாதுகாத்தோம். இதெல்லாம் எமது கட்சியைத் தற்போது முடக்க முயலும் சூழ்ச்சிக்காரர்களுக்கு – மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு நன்கு தெரியும்.

தமிழரசுக் கட்சிக்குள் வந்து அரசியல் முகவரி தேடிய இந்தச் சூழ்ச்சிக்காரர்கள், கட்சியை முடக்க முயல்வது அசிங்கமானது. அவர்கள் நன்றி மறந்தவர்கள். அவர்களின் எண்ணம் நிறைவேற நாம் ஒருபோதும் இடமளியோம்." – என்றார்.

# மதுரங்குளியில் ஒருவர் கொலை



புத்தளம், மதுரங்குளி பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பலத்த காயமடைந்த நபர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

55 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

---

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பாவற்குளம், படிவம் இரண்டு பகுதியில் சாரதி பஸ்ஸை நிறுத்தி விட்டு மீண்டும் சேவையில் ஈடுபடுவதற்காக பஸ்ஸைச் செலுத்தினார். அவ்வேளை சைக்கிளில் பயணித்த இரண்டு சிறுவர்கள் வீதியை ஊடறுக்க முற்பட்டபோது பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானார்கள்.

இதில் சைக்கிளில் பயணித்த 7 வயதுடைய அப்துல் மஜித் உமர் என்ற சிறுவன் உயிரிழந்துள்ளார்.

சம்பவம்தொடர்பில்உளுக்குளம்பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

உயிரிழந்த சிறுவனின் சடலம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

---

## தமிழரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யாழ். கல்வியங்காட்டில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்த மாவை சேனாதிராஜா பதவி விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்குக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவராக இருந்த என்னைப் பதில் தலைவராக எஞ்சிய காலத்துக்குக் கடமையாற்றுமாறு தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவினர் கூடி தெரிவு செய்திருக்கிறார்கள்.

கட்சியின் அடுத்த மாநாடு வரையில் இந்தப் பணி தொடரும். அதற்கு இடைப்பட்ட காலத்தில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை ஆகிய இரண்டு தேர்தல்கள் இடம்பெற இருப்பதால் கட்சியில் தொய்வில்லாத வகையில் செயற்பாடுகள் அமைய வேண்டி இருக்கின்றன.

அதற்காகக் கட்சியின் செயற்பாடுகளை முழுவீச்சில் செயற்படுத்த வேண்டிய கடப்பாடுகள் எனக்கு இருக்கின்றன. கடந்த வருடங்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் வேட்புமனுக்கள் கோரப்பட்டு தேர்தல் நடைபெறாத நிலையில் அந்த வேட்புமனுக்கள் இரத்தாகும் என்றால் புதிய வேட்பாளர்களைத் தெரிவு செய்ய வேண்டிய நிலை இருக்கின்றது.

எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில் ஒரு கருத்து தவறாகவோ, சரியாகவோ இருக்கின்றது. அதாவது ஏற்கனவே கட்சியில் இருப்பவர்களுக்குத் தான் கட்சி வாய்ப்பளிக்கும் என்பதால் புதியவர்கள், இளையவர்கள் கட்சியில் இணைந்து அங்கத்துவமாகச் சேர்ந்து உள்ளூராட்சி சபைகளிலே அரசியல் ரீதியாகப் பணியாற்றுவதற்குப் பின்னிற்கின்றார்கள் என்ற நிலை இருக்கின்றது.

ஆகவே, உண்மையாகச் சொன்னால் தேர்தல் முறையிலே இருக்கக் கூடியவாறு இளையவர்கள், மகளிர்கள் எனப் போதியவர்கள் எங்கள் கட்சியில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனாலும், சில இடங்களில் அப்படியானவர்கள் இருந்தாலும் அனைத்து இடங்களிலும் பொருத்தமானவர்கள் இல்லாத நிலைமை உள்ளது.

ஆகவே, புதிய இளையவர்கள், மகளிர்கள் அரசியல் பயணத்துக்கு முன்வர வேண்டுமென நான் அழைப்பு விடுக்கிறேன். மக்களுக்குச் சேவையாற்ற எமது கட்சியுடன் இணைந்து பயணிக்க முன்வர வேண்டும் எனக் கோருகின்றேன்.

அவர்கள் வசிக்கின்ற பகுதிகளிலுள்ள கட்சியின் மூலக்கிளை அல்லது தொகுதிக் கிளையின் ஊடாக விண்ணப்பித்து அடுத்து வரும் இரண்டு வாரங்களுக்குள்ளே சேர்ந்து கொண்டால் கட்சி ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து பயணிக்கும்.

வடக்கு, கிழக்கிலே கட்டமைப்பைக் கொண்டதும், அனைத்து மாவட்டங்களிலும் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் கொண்டதும் எங்களுடைய கட்சிதான். ஆனாலும், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தொய்வு அல்லது நாங்கள் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட இந்த பின்னடைவில் இருந்து அடுத்து வரும் தேர்தல்களில் மீளெழுச்சி பெற்று நாங்கள் எங்களை நிலைநாட்டிக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு கட்சி மீளெழ வேண்டுமானால் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டிய தேவை இருக்கின்றது." – என்றார்.

# அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் இணையத்தளம் மீது சைபர் தாக்குதல்




அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மீது சைபர் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

நபரொருவர் அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் உத்தி யோகபூர்வ இணையத்தளத்திற்குள் அனுமதியின்றி உட்பிர வேசித்துள்ளார் என இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்தார்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு தொடர்பற்ற விடயங்களை வெளியிட முயற்சித்தமையை அடுத்து இந்த விடயம் அவதானிக்கப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## புது வருடப் பிறப்பு

புது வருடம் என்பது புதிய நாள் காட்டி வருடம் தொடங்குவதைக் குறிக்கிறது. பெரும்பான்மையான உலகக்கலாசாரங்களில்புதுவருடத்தொடக்கம் கொண்டாடப்படுகிறது.

உலகம் முழுவதும் தற்காலத்தில் உபயோகித்து வரும் கிரெகொரியின் நாள்காட்டியின்படி புது வருடம்ஜனவரி மாதம்முதல்திகதி தொடங்குகிறது. அதன்படி இன்று 2025 இன்று பிறக்கின்றது. புதிய மிலேனியத்தின் முதல் கால் நூற்றாண்டின் கடைசி வருடம் இது.

புத்தாண்டு பிறப்பதனால் வாழ்வில் புதுமைகளும் மகிழ்ச்சியும் பிறக்கும் என்பது பொதுவான நம்பிக்கையாக உள்ளது. காலநிலை மாறுதல்கள் மற்றும் பருவகால மாறுதல்கள் எனப் பல அர்த்தப்பாடுகளை உடையதாக புத்தாண்டுப் பிறப்பு அமைகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் மனிதகுலத்தின் மனதில் புத்துணர்வையும், புது நம்பிக்கையையும் விதைப்பதற்கான உன்னத திருநாளாக ஆங்கிலப் புத்தாண்டு பிறக்கின்றது. ஓராண்டில் ஆயிரமாயிரம் ஏமாற்றங்கள், வருத்தங்கள், கவலைகள் இருந்தாலும், அவை அனைத்தையும் நாள்காட்டியுடன் சேர்த்து ஒதுக்கி வைத்து விட்டு, புதிதாக பிறக்கப் போகும் ஆண்டில் எத்தனை சவால்கள் வந்தாலும் அவற்றை துணிச்சலுடன் எதிர்த்து நின்று வீழ்த்தும் நம்பிக்கையையும், உத்வேகத்தையும் நமக்கு அளிப்பது புத்தாண்டுதான்.

இலங்கைத் தீவில் தமது தன்னாதிக்க இறைமையை இழந்து அடிமைப்பட்ட வாழ்வியலைத் தொடர்ந்து, இன்னல்களை அனுபவித்து வரும் இலங்கைத் தமிழர்களுக்கு புத்துயிர்ப்புக்கான - புத்தெழுச்சிக்கான - காலம் இன்னும் கிட்டவேயில்லை.

அத்தகைய எதிர்காலம் கிட்டும் என்ற நம்பிக்கையோடு - எதிர்பார்ப்போடு - ஒவ்வொரு புது வருடத்துக்கும் காத்திருந்து ஏமாந்து நிற்பதுதான் தமிழர்களின் துன்பமாக நீடிக்கின்றது.

இந்த வருடமும் அத்தகைய எதிர்பார்ப்போடுதான் இன்று பிறக்கும் புத்தாண்டைதமிழர்கள்வரவேற்கின்றார்கள். எதிர் கொள்கின்றார்கள்.

நேற்று முடிவடைந்த ஆண்டில் இலங்கைத் தீவு இரண்டு தேர்தல்களைச் சந்தித்தது. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்.

இன்று பிறந்திருக்கும் புத்தாண்டிலும் இரண்டு தேர்தல்களை - உள்ளூராட்சித் தேர்தலையும் மாகாண சபை தேர்தலையும் - நாடு தேசிய ரீதியில் சந்திக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

தென்னிலங்கை எதிர்பார்த்த - விரும்பிய - தேர்தல் முடிவுகள் நேற்று முடிவடைந்த ஆண்டில் கிட்டின. அவை தேசிய ரீதியான தேர்தல்கள்.

இந்த ஆண்டில் நடைபெறக் கூடிய இரண்டு தேர்தல்களும் முழு நாட்டிலும் இடம்பெற்றாலும், அவை அந்தந்தப் பிரதேசங்களுக்கு உரிய அரசியல் கட்டமைப்புக்களை உருவாக்கும் தேர்தல்களாக அமைகின்றமையால் இலங்கை தீவில் தமிழர் தேசத்துக்கு இவ்வாண்டுக்கானஈந்த இரு தேர்தல்களும் முக்கியத்துவம் மிக்கவையாக அமைகின்றன.

இந்த இரண்டு தேர்தல்களும் நடந்தால் மட்டும் போதாது, அவற்றின் மூலம் தெரிவாகும் கட்டமைப்புகளுக்கு அவற்றுக்குப் பகிரப்பட்ட சட்ட ரீதியான அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்படவும் வேண்டும்.

இன்று பிறந்த ஆண்டிலாவது அவை கிட்டும் என்ற நம்பிக்கையோடு தமிழர்கள் இருக்கிறார்கள்.

எது, எப்படியாயினும் தமிழர் தேசம் நீண்ட பல தசாப்தங்களாக எதிர்பார்த்துக் காத்திருக்கும் தமிழ்த் தேசிய பிரச்சினைக்கான தீர்வு இந்த வருடத்திலேனும் கிட்டும் என்ற நம்பிக்கை தமிழர்களுக்கு இன்னும் பிறக்கவில்லை என்பதுதான் உண்மையான கள நிலைவரமாகும்.

# ஊடகங்களுக்கு தணிக்கை விதிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை

## அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

ஊடகங்களுக்கு தணிக்கை விதிக்கும் எண்ணம் புதிய அரசாங்கத்திற்கு இல்லை என சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர், டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இலங்கை இலத்திரனியல் ஒலிபரப்பாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் ஊடக அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தமது கருத்துகள் மற்றும் முன்மொழிவுகளை அமைச்சரிடம் முன்வைப்பதற்கும் பல கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்குமான நோக்கில் இலங்கை இலத்திரனியல் ஒலிபரப்பாளர்கள் சங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சங்கத்தை பாதிக்கும் வகையில் தற்போது வரைவு செய்யப்பட்டுள்ள சட்டமூலம் மற்றும் நடைமுறையிலுள்ள சட்டங்களில் உள்ள சில குறைபாடுகள் தொடர்பில் அமைச்சருக்கு இதன்போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஊடகங்களும் அரசாங்கமும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டுமென அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

மக்களுக்காக ஊடகங்களை முறையாக நிர்வகிக்கும் பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்றுவதாகவும் ஊடகங்கள் மீது தணிக்கை விதிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் வெகுஜன ஊடக அமைச்சு பொறுப்பற்ற,




செயலிழந்த இடமாக மாற்றப்பட்டுள்ளதால் வெகுஜன ஊடக அமைச்சை சரியான இடத்திற்கு கொண்டுசெல்வதே தற்போதைய அரசாங்கத்தின் முதன்மையான நோக்கம் என அமைச்சர் கூறினார்.

ஊடகங்கள் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் செயற்படக்கூடிய சூழலை உருவாக்கி ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை இலத்திரனியல் ஒலிபரப்பாளர்கள் சங்கத்தின் அதிகாரிகள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இறக்குமதி செய்யப்படுகின்ற அரிசி மீதான வரி நீக்கப்படாது



இறக்குமதி செய்யப்படும் அரிசி மீதான வரி நீக்கப்படமாட்டாது என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் வகையில் 77,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது துறைமுகத்தில் உள்ள சுமார் 11,000 மெற்றிக் தொன் அரிசி, இன்னும் ஓரிரு நாள்களில் விடுவிக்கப்படும்.

கணிசமான அளவு அரிசி தொகை தற்போது நாட்டுக்குள் விநியோகிக்கப்பட்டுள்ளது.

எனினும், தனியார் துறையின் விநியோக வலையமைப்பிலுள்ள சில சிக்கல் காரணமாகத் தாமதம் ஏற்படலாம்.

ஜனவரி மாத நடுப்பகுதியளவில் உள்நாட்டு விவசாயிகளின் அரிசியும் சந்தைக்குக் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உள்ளூர் விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கிலேயே இறக்குமதி செய்யப்படும் அரிசிக்காக விதிக்கப்படும் வரியை நீக்குவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தவில்லை.

அத்துடன், அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையைத் திருத்துவது தொடர்பிலும் அமைச்சரவை எந்த நடவடிக்கையையும் எடுக்கப்படவில்லை,” – என்றார்.




# பல்கலை விரிவுரையாளர்களை இணைத்துக்கொள்ள அனுமதி

பல்கலைக்கழகங்களுக்கு புதிய விரிவுரையாளர்களை இணைத்துக் கொள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவுடன் கலந்துரையாடிய பின்னர் இதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதாக அதன் தலைவர் பேராசிரியர் கபில செனவிரத்ன தெரிவித்தார்.

புதிய விரிவுரையாளர்களை இணைத்துக்கொள்வது தொடர்பில் 2 சுற்றுக் கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன.

தற்போது வெற்றிடமாகவுள்ள விரிவுரையாளர்களில் 50 வீதமானவர்களை சேவையில் இணைத்துக் கொள்வதற்கு இதன்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறியமையினால் இவ்வாறு வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மருத்துவ பீடங்களில் கற்பிப்பதற்கான விரிவுரையாளர்கள் இல்லை எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

# மாதாந்த எரிபொருள் விலைத் திருத்தம் மண்ணெண்ணெய் மாத்திரம் குறைந்தது



நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் மண்ணெண்ணெய் விலையை மாத்திரம் இலங்கை கனியவள கூட்டுத்தாபனம் குறைத்துள்ளது.

அதற்மைய, மண்ணெண்ணெய் விலை 5 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ள நிலையில். அதன் புதிய விலை 183 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஏனைய எரிபொருள்களின் விலையில் மாற்றம் மேற்கொள்ளாதிருப்பதற்கு இலங்கை கனியவள கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, ஒக்டென் 92 பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 309 ரூபாவாகவும், ஒக்டென் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 371 ரூபாவாகவும் தொடர்ந்தும் பேணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 286 ரூபாவாகவும், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 313 ரூபாவாகவும் தொடர்ந்தும் மாற்றமின்றி பேணுவதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை கனியவள கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.





# 2025 புத்தாண்டை வாண வேடிக்கைகளோடு வரவேற்றன அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து

(ஐங்கரன் விக்கினேஸ்வரா)

பசிபிக் நாடான கிரிபாட்டி 2025 புதிய ஆண்டை முதன் முதலாக வரவேற்றது. அதைத் தொடர்ந்து ஒரு மணிநேரம் கழித்து நியூஸிலாந்து புத்தாண்டைக் கொண்டாடியது.

அதனைத் தொடர்ந்து 2025ஆம் ஆண்டு பிறந்துவிட்டதை உலகின் பல பகுதிகளில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் முழு வேகத்தில் நடந்துகொண்டிருக்கின்றன.

அவுஸ்திரேலிய நகரத்தின் புகழ்பெற்ற வானவேடிக்கைக் காட்சிகளைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் சிட்னியில் கூடினர்.

அவுஸ்திரேலியாவில் 2025 புத்தாண்டு கொண்டாட்டம், இரவை பகலாக்கிய வான வேடிக்கை நிகழ்ச்சிகள்

சிட்னி நகரில் காண்போரை வியக்க வைக்கும் வகையில் பிரம்மிப்பூட்டும் வான வேடிக்கை நிகழ்ச்சிகள் அரங்கேறின.

சிட்னியின் வானவேடிக்கை அதன் துறைமுகப் பாலம், ஓபரா ஹவுஸ் மற்றும் அதன் புகழ்பெற்ற துறைமுகத்தில் நடைபெற்றது.

2025 புத்தாண்டு கொண்டாட்டமானது இரவை பகலாக்கிய வான வேடிக்கையாக நிகழ்ச்சிகள் பல சிட்னி கடற்கரையிலும் நிகழ்ந்தன.

சிட்னி நகரில் ஒவ்வொரு ஆண்டும் வெகு விமரிசையாக புத்தாண்டு கொண்டாட்டங்கள் நடைபெறும்.

இதைக் கண்டு ரசிப்பதற்காகவே உலகம் முழுவதும் இருந்து அதிக எண்ணிக்கையிலான சுற்றுலா பயணிகள் ஆஸ்திரேலியாவிற்கு செல்கின்றனர். அந்த வகையில் சிட்னி நகரில் புத்தாண்டு கொண்டாட்டம் களைகட்டியது.

அங்கு 2025 ஆம் ஆண்டை வரவேற்கும் விதமாக வண்ண, வண்ண வான வேடிக்கைகளுடன் இரவை பகலாக்கும் வகையில் வானத்தில் ஒளி வெள்ளம் பரவியது. இதில் காண்போரை வியக்க வைக்கும் வகையில் பிரம்மிப்பூட்டும் வான வேடிக்கை நிகழ்ச்சிகள் அரங்கேறின. இதனைக் கண்டு ரசித்த மக்கள், தங்களுக்குள் புத்தாண்டு வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டு 2025 ஆம் ஆண்டை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.







# ‘புதுவருடம் - 2024’ சிறப்பிதழ்




# ஜனவரி ஒன்று புத்தாண்டு எப்படி உருவாகியது...?



நடராஜன் ஹரன்

21 ஆம் நூற்றாண்டின் 25 ஆவது வருடமாகவும் 04 ஆவது மிலேனியத்தின் 25 ஆவது ஆண்டாகவும் அமைந்துள்ள இந்த 2025 புதுவருடம் தேவாலயங்களில் நள்ளிரவு ஆராதனையுடன் சாய் பாபாவின் சமித்திகளிலும் இந்து ஆலயங்களில் அதிகாலை பூஜை நிகழ்வுடன் புத்தாண்டு வரவேற்கப்பட்டிருந்தது.

இந்தப் புத்தம் புதிய ஆண்டுவான சாஸ்திர அறிஞர்கள் கூற்றுப்படி 4 ஆவது மிலேனியத்தின் 25 ஆவது ஆண்டு என்றும் இந்து நாள்காட்டியின் படி கலியுகம் 5126 - 5127 எனவும் பௌத்த ஆண்டு 2569 என்றும் இஸ்லாமிய நாள்காட்டியின் படி ஹிஜ்ரி 1446 எனவும் கொள்ளப்பட்டு அந்தந்த மத மக்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இருந்த போதிலும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய கிரேக்கரின் ஆங்கில வருடப் பிறப்பான ஜனவரி 01 ஆம் திகதியையே உலகத்தவர் அனைவரும் புத்தாண்டு வருடப் பிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். இதனடிப்படையிலேயே உலக வர்த்தகங்கள், விஞ்ஞான மெஞ்ஞான கணக்குகள் வானசாஸ்திரங்கள் அமையப் பெற்றுள்ளன.

1958 ஆம் ஆண்டின் அடிப்படையிலேயே இந்த 2025 ஆம் ஆண்டின் நாள்காட்டி அமையப் பெற்றுள்ளதும் இதன் பலாபலன்களையே எதிர்பார்க்க படுவதும் குறிப்பிடத்தக்கது.

உலகில் வாழும் மக்கள் ஏதாவது ஒரு எல்லைக்குள் கட்டுப்பட்டு வாழ வேண்டியுள்ளது. அதற்காகவே காலக் கணக்கீடுகள் உருவாக்கப்பட்டன.

ஆண்டு, மாதக் கணக்குகள் ஏதேனும் ஒரு நாள்காட்டியின் அடிப்படையில் தான் கணிக்கப்படுகின்றன. ஆங்கில நாள்காட்டி என்றவுடன் நாம் அது ஆங்கில மொழி தோன்றிய இங்கிலாந்தின் நாள்காட்டி என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. கூறப்போனால், இது ஆங்கில நாள்காட்டி என்பதைவிட இதைச் சர்வதேச நாள்காட்டி என்றுதான் கூற வேண்டும். இது க்ரிகேரியன் நாள்காட்டியை அடிப்படையாகக் கொண்டது. பொதுவாக, தங்கள் நாட்டுக்கெனத் தனித் தனியே வெவ்வேறு நாள்காட்டிகளைக் கொண்ட நாடுகள் தங்களுக்கு இடையே தகவல் பரிமாற்றம் மற்றும் ஒப்பந்தங்கள் ஆகியவற்றுக்கு இந்த நாள்காட்டியையே பயன்படுத்துகின்றன.

இந்த க்ரிகேரியன் நாட்காட்டி வழக்கத்துக்கு வந்ததே 16 ஆம் நூற்றாண்டில் தான். இது கிருஸ்தவர்கள் (குறிப்பாகக் கத்தோலிகர்கள்) தங்கள் ஈஸ்டர் பண்டிகையைச் சரியாகக் கணிக்க வடிவமைக்கப்பட்டது. முதலில் வெவ்வேறு கத்தோலிக் குழுக்களாலேயே நீண்ட சர்ச்சைக்குள்ளான இந்த நாள்காட்டி பின்னர் படிப்படியாக பெரும்பாலான நாடுகளால் ஏற்கப்பட்டது.

இது பெருமளவில் ரோம சாம்ராஜ்ஜியத்தின் ஜூலியன் நாள்காட்டியின் அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டது. கி.மு. 222 ஆண்டுக்கு முன் வரை புத்தாண்டு மே மாதம் முதல் திகதியில் கொண்டாடப்பட்டு வந்துள்ளதாகக் கூறுகின்றனர். கி.மு. 222 ஆண்டு முதல் கி.மு.153 ஆம் ஆண்டுவரை புத்தாண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. கி.மு.153 ஆம் ஆண்டு முதல் புத்தாண்டு ஜனவரி முதல் திகதியில் இருந்து கொண்டாடப்பட்டு வருகிறது. கி.மு.45 ஆம் ஆண்டு முதல் ஜூலியன் நாள்காட்டி அமுலுக்கு வந்த பின்னரும் பல்வேறு நாடுகளில் பல்வேறு அரசுகள் ஆண்டுத் துவக்கத்தை மாற்ற முயன்றும் (கணக்கு வழக்கு ஆண்டுகளை மாற்றிய போதும்) மக்களைப் பொறுத்தவரை பொது ஆண்டின் ஆரம்பம் ஜனவரி 01 ஆம் திகதியாகவே இருந்து வருகிறது.

இலங்கையரை பொறுத்தவரை ஜனவரி முதல் திகதியை கிறிஸ்தவ ஆண்டின் துவக்கம் என்றும் கூறுவோம். ஆனால், 10-17 நூற்றாண்டுகள்வரை பல்வேறு (ஐரோப்பிய) நாடுகள் கிறிஸ்தவ மத ஆலயங்களின் ஈர்ப்பால், தூண்டுதலால் தங்கள் நாடுகளில் ஆண்டு தொடக்கத்தை டிசெம்பர்-25, மார்ச்-25 (தேவமாதா கருவுற்ற நாள்), ஈஸ்டர் ஆகிய நாள்களுக்கு மாற்ற முனைந்ததும் நடைபெற்றுள்ளது. க்ரிகேரியன் நாள்காட்டிக்கு மாறியவுடன் பெரும்பாலான நாடுகள் ஜனவரி முதல் திகதியையே மீண்டும் ஆண்டுத் தொடக்கமாகக் கொண்டன.

ஜூலியன் நாள்காட்டிக்கும் க்ரிகேரியன் நாள்காட்டிக்கும் இடையில் ஒவ்வொரு நானூறு ஆண்டுகளுக்கும் மூன்று நாட்கள் வித்யாசம் உண்டு. க்ரிகேரியன் நாட்காட்டியில் 1700,1800,1900 ஆகிய ஆண்டுகள் லீப் வருடமாக இல்லாமல் சாதாரண ஆண்டாக இருக்கும். இதனால், கத்தோலிகத் திருச்சபையால் 16-ஆம் நூற்றாண்டில் (1582-இல்) ஜூலியன் நாள்காட்டியிலிருந்து 10 நாள்கள் நீக்கப்பட்டன.

தொடர்ச்சி ▼




# ஜனவரி ஒன்று புத்தாண்டு எப்படி உருவாகியது...?

தொடர்ச்சி ▲

1582 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 4 ஆம் திகதி (விழாயக் கிழமைக்கு) அடுத்த நாள் ஒக்ரோபர் 15 ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) என்று குறிக்கப்பட்டு க்ரிகேரியன் நாள்காட்டிக்கு மாற்றப்பட்டது.

ஆனாலும் பெரும்பான்மையான ஐரோப்பிய நாடுகள் 17-18 ஆம் நூற்றாண்டில்தான் க்ரிகேரியன் நாள்காட்டிக்கும் மாற்றம் செய்து கொண்டன.

ஆங்கில மொழியின் தாய்நாடான இங்கிலாந்தில் 1752 ஆம் ஆண்டுதான் க்ரிகேரியன் நாள்காட்டிக்கு மாற்றம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. அப்பொழுது 11 நாள்கள் குறைக்கப்பட வேண்டியிருந்தது. '11 நாள்களைத் திருப்பிக் கொடு' என்பது போன்ற போராட்டங்கள் ஏற்பட்ட மாற்றம் 1800 இற்குத் தள்ளிப் போனது. (அப்பொழுது 12 நாள்கள் குறைக்க நேரிட்டது).

பழைய நிதி ஆண்டின் துவக்கமாக மார்ச்-25 (பெருமாட்டி தினம்) இல் இருந்து ஏப்ரல் -6 ஆம் திகதிக்கு நிதி ஆண்டு மாற்றப்பட்டது.

ரஷ்யாவின் க்ரிகேரியன் ஆண்டு 1917 இல் ஒக்ரோபர் புரட்சிக்குப் பின்னர் ஏற்கப்பட்டது. கூறப்போனால் அதை ஒக்ரோபர் புரட்சி என்பதே தவறு. ஏனெனில், புரட்சி நடந்தது ஜுலியன் வருடத்தின் ஒக்ரோபர் மாதம். ஆனால் க்ரிகேரியனில் அப்பொழுது நவம்பர் ஆரம்பம் ஆகிவிட்டது. 1918 இல் ஜனவரி 31 ஆம் திகதிக்குப் பின் பெப்ரவரி 14 ஆம் திகதியாக மாற்றப்பட்டது.

எப்படி இருந்தாலும் தற்போது பெரும்பாலான நாடுகளில் (மதச் சடங்குகளைத் தவிர்த்த விடயங்களில்) இந்த க்ரிகேரியன் நாள்காட்டிகள் வழக்கத்துக்கு வந்துவிட்டபடியால் ஜனவரி முதல் திகதியே புத்தாண்டாகக் கொண்டாடப்படுகிறது.

# புது வருட பிறப்பு!



செ.அனுத்திரா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

காலை கதிரவனின் ஒளிபட்டு ரோஜா இதழ்கள் விரிய சிட்டுக் குருவிகளின் ரீங்காரத்துடன் அதிகாலை விடியுமாக இருந்தால் அது என் பாட்டி வீட்டில் தான்.

என் மனதுக்குக் கஷ்டமாக இருக்கின்ற போது நான் பாட்டி வீட்டுக்கு செல்வேன். இம்முறை வருட பிறப்புக்கு முன்னர் பல வருடங்கள் கழித்து பாட்டி வீட்டுக்கு சென்றேன். பார்ப்பதற்கே கண்ணுக்கு குளிர்மையாக பச்சைப் பசேல் என வயல்வெளிகள் அதன் நடுவில் ஓலையால் போடப்பட்ட அழகிய சிறிய வீடு.

நான் வாசல் கதவை திறந்த போது பாட்டி உள்ளிருந்து பனை ஓலை பெட்டி பின்னிக் கொண்டிருந்தார். கதவு சத்தம் கேட்டு பெட்டியை கீழே வைத்துவிட்டு எழும்பி வந்தார்.என்னைக் கண்டவுடன் அவரது முகம் பூரிப்படைந்தது. கண்களில் இருந்து நீர் வடிந்தது. ஓடிச் சென்று கட்டியணைத்துக் கொண்டேன்.

"என்னம்மா பாட்டிய பார்க்க வாரதில்லை. இப்பதான் இந்த கிழவி ஞாபகம் வந்ததோ" என்று பொய் கோபத்துடன் திரும்பினார்.

இந்தமுறை புதுவருசத்தை பாட்டியோடு




சேர்ந்து கொண்டாடலாம் என்று நினைச்சன் என்று கூறிக் கொண்டு திரும்பிய போது அவரின் கோபம் மறைந்து விட்டது.

" நான் சும்மா சொன்னான்" என்று என் கையை பிடித்து இழுத்து சென்றாள். அன்றைய பொழுது பாட்டியுடன் மகிழ்ச்சியாக ஓடியது.

மறுநாள் காலை எழுந்து வேப்பம் குச்சியால் பல்லை தீட்டி விட்டு, கால் கையை கழுவிவிட்டு வரும்போது பாட்டி சாணத்தைக் கொண்டு வீட்டின் நிலத்தை மொழுகிவிட்டு வந்தார். அப்படியே இருவரும் வாசலில் இருந்து தேநீர் குடித்தபடி கதைத்துக் கொண்டிருந்தோம்.

"என்னம்மா படிப்பு எல்லாம் எப்பிடி போகுது" என்று பாட்டி கேட்டார். படிப்பெல்லாம் போகுது இப்ப லீவு. அதுதான் உங்கள பாத்துட்டு போவோம் என்று வந்தனான். புது வருட பிறப்பை கொண்டாடிவிட்டு வீடு திரும்ப வேணும்.

தொடர்ச்சி ▼



# புது வருட பிறப்பு!

தொடர்ச்சி▲

இல்லாட்டி அம்மா என்ன ஒரு கைபாத்திடுவா என்று கூற பாட்டி சிரித்தார்.

சரி அம்மா என்ன செய்கிறா, அம்மாவ பாக்கவே ஏலாது ஒரே வேலை வேலை என்று, வீட்டிலேயே நிக்கிறேல்லையாம் புது வருசத்தோட விடப்போறாவாம் வேலையை எண்டு அப்பா சொன்னவர்.

" அடுத்த வருசமாச்சு என்ர மகளுக்கு நல்ல காலம் வரட்டும்..." என பெருமூச்சு விட்டார்.

பாட்டியின் சிரிப்பைகேட்டு நீர் எடுக்க சென்ற இருவர் பாட்டியிடம் வந்து கூடியிருந்து கதைக்க ஆரம்பித்தனர்.

அந்தச் சூழலைப் பார்ப்பதற்கு வித்தியாசமாகவும் புதிதாகவும் இருந்தது. அவர்களிடம் எந்த வித தொல்லை பேசியும் இருக்கவில்லை.அதனை அவர்களும் விரும்பவில்லை. அதுகும் புதிதாக தான் இருந்தது. சரி என்று நானும் அவர்களோடு சேர்ந்து கொண்டேன். கதை புது வருடத்தை நோக்கி நகர்ந்தது.

புது வருஷம் வருது என்ன நேரத்தில் பிறக்கப் போகுதோ! எல்லாம் பாக்கணும். அப்ப என்ன பலகாரம்? எல்லாம் எப்பிடி இந்த முறை நல்ல கொண்டாட்டம் போல. "என்ர பேத்தி வந்திருக்கிறாள். அப்ப கொண்டாடத்தானே வேணும்" "இது உங்கட பேத்தியா? பார்க்க ராசாத்தி மாதிரியே இருக்கு.

" ஓம் என்னுடைய பேத்தி தான். இந்த முறை வருச கொண்டாட்டம் என்னோட தான் என்று மகிழ்சியாக கூறினார். இந்த முறை லட்டு , சிப்பி, தட்ட வடை என்று பிடிச்ச பலகாரங்கள் செஞ்சு கொடுக்கோணும் என்ர பேத்திக்கு என்றார்.

ஏன் பாட்டி உங்களுக்கு கஷ்டம் அது எல்லாம் கடையில வாங்கலாம் தானே என்று கூறிய போது "என்ன கடையில வாங்கிறதா" என்று திகைப்பாக பார்த்தார்கள்.

ஓம் பாட்டி கடையில வாங்கலாம். நான் உங்களுக்கு ஓடர் பண்ணி வாங்கித் தாறன். நான் இவ்வாறு கூற பாட்டி என்னை புதிதாக பார்த்தார். என்ன ஓடர் பண்ணியா? ஓம் பாட்டி. உங்களுக்கு தெரியாதா? இல்லையம்மா "எங்கட பிள்ளைகளுக்கு எங்களோட கதைக்கவே நேரமில்ல பேந்து எங்க இதெல்லாம் தெரிந்து கொள்ளுறது" என்று வருத்தப்பட்டனர். அச் சூழ்நிலையைச் சமாளித்த பாட்டி நானே என்ர கையால உனக்கு செஞ்சு தாறன் என்று கூறிய போது நாங்க சேந்து செய்வம் என்று கூறி மகிழ்ந்தனர் அங்கு பாட்டியுடன் கதை பேச வந்தவர்கள்.

நான் யோசித்து பார்த்தேன். நாங்க வருடப் பிறப்பை இவ்வளவு வருடங்களாக எவ்வாறு கொண்டாடி இருக்கிறோம் என்று.

ஆம் முன்னர் வருட கொண்டாட்டம் என்றால் கஷ்டமான வேலை என்றாலும் இஷ்டப்பட்டு செய்வார்கள். பக்கத்து வீட்டுக்காறர்களுடன் கூடி மகிழ்ச்சியாக வேலையை செய்து முடித்து விடுவார்கள். ஆரோக்கியமான பலகாரங்களை செய்து உறவினர்களுக்கு பகிர்ந்து உண்பார்கள். அயலவர்களின் வீடுகளுக்கு சென்று மகிழ்ச்சியாக கொண்டாடுவதோடு சிறுவர்கள் பாரம்பரிய விளையாட்டுக்களையும் கூடி விளையாடுவர்.

புது வருடத்தை நம்பிக்கையாகவும் உற்சாகத்தோடும் வரவேற்பார்கள் எந்த ஒரு மனக் குழப்பமும் இல்லாமல் புது வருடத்தை வரவேற்பார்கள்.

ஆனால் நாங்கள் வட்ஸ் அப் ஊடாக நண்பர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து விட்டு, போர்வையை இழுத்துப் போர்த்தி மறுபுறம் திரும்பி கிடந்து வருடத்தை வரவேற்றிருக்கிறோம்.

உறவினர்கள் வீட்டுக்கு செல்லாமல், அவர்களையும் மறந்து உறவையும் மறந்து வேலை வேலை என்று ஓடிய வருடப்பிறப்பு. உடனடியாக அவர் அவர்களுக்கு விரும்பிய பலகாரங்களை கடையில் இருந்து வாங்கி அதனையும் பகிர்ந்து உண்ணாமல் தனியாக உண்டு போன வருடப் பிறப்பு. இளைஞர்கள் மதுபாவனையில் மூழ்கி இருந்து கொண்டாடும் வருடப்பிறப்பு.

இதற்கு மேல் அடுத்த வருடம் வருகுது ஐயோ! கடன் காசு கட்ட வேணுமே, இந்த வருசத்தோட லோன் முடியுது. புது லோன் எடுக்கவேணும், இந்த முறையாவது சொந்தமா வாகனம் வாங்கணும், நல்ல வேலை கிடைக்கணும், சொந்தமா நிலம் வாங்கணும், நான் என்னையே அடுத்த வருடத்தில் இருந்து மாத்திக்க வேணும் என்று பலரும் வருடப்பிறப்பை கொண்டாடினர்.

இப்படியான வரவேற்பை பார்க்கிலும் பாட்டியோடு எந்த ஒரு கவலையும் இல்லாமல் சந்தோஷமாக புது வருடத்தை வரவேற்கப் போவதை நினைத்து மகிழ்ச்சி அடைந்தேன்.

பூகோளமயமாதலின் வளர்ச்சியே இன்று நமது பண்பாட்டையும் மாற்றி விட்டது. நாமும் அதனோடு சேர்ந்து மாறிவிட்டோம் ஆனால் அதனை திரும்பி நினைத்து பார்ப்பதற்கு கூட நேரம் இல்லாமல் ஓடிக் கொண்டே இருக்கின்றோம்.

ஆனால் கிராமப் புறங்களில் வாழ்கின்ற மக்கள் நமது பண்பாட்டை என்றும் மறவாது பாதுகாத்து வருகின்றார்கள். அனைவரும் புது வருடத்தை புதிய நம்பிக்கையுடன் கொண்டாடுகிறார்கள்.

ஆனால் நாம் கடன் காசு கட்ட வேண்டும் வேலையில் ப்ரமோஷன் வேண்டும் என்று திரிந்து கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு புது வருட பிறப்பும் வாழ்க்கையின் படிக்கற்கள். அனுபவத்தை வைத்து அடுத்த வருடமாவது புதிய நம்பிக்கையுடன் செயல்படுவதற்கே புது வருடம் கொண்டாடப்படுகிறது.

நேரம் பொன்னானது அது கடந்து விட்டால் அதனை மீண்டும் நாம் பெற்றுக் கொள்ளமுடியாது. ஒருமுறை நின்று நாமும் சிந்தித்துப் பார்த்தால் நாம் நமக்குள் இருக்கும் சந்தோஷத்தை விட்டு வேறு எங்கோ சந்தோஷத்தை தேடிச் செல்கின்றோம் என்பதை புரிந்து கொள்ளலாம்.

வாழ்க்கையில் வெற்றி தோல்வி வந்து கொண்டேதான் இருக்கும். அதனைப் பற்றிச் சிந்திக்காமல் இந்தப் புது வருடத்தை வீட்டில் உள்ள அனைவரோடும் இணைந்து வரவேற்போமாக இருந்தால் நமது வாழ்க்கை நம்பிக்கையுடன் நடைபோடும்.



# இறைவனின் தாயின் திருவிழா இன்று...!



ம.பிரான்சிஸ்க்
(கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர், ஆசிரியர், தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்)

ஆண்டின் முதல்நாளைக் கத்தோலிக்கதிருச்சபைமேரிமாதா(அன்னை மரியாள்) இறைவனின் தாய் என்னும் திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றது. மேரிமாதா இறைவனின் தாய் என்கிற இத்திருவிழாவின் முக்கியத்துவம் என்ன? எதற்காக மேரிமாதா இறைவனின் தாய் என்று அழைக்கப்படவேண்டும்? என்ற கேள்விகளுக்கு விடைதேட வேண்டிய கட்டாயம் எமக்கு உண்டு.

மேரிமாதா ஆரம்ப காலத் திருச்சபையில் பெற்றிருந்த பங்கும் மரியியல் (மரியாள் பற்றிய ஆய்வு) சிந்தனைகளையும் மரியாளின் வணக்கத்தையும் கத்தோலிக்கத் திருச்சபை உயிரோட்டத்துடன் உறுதிப்படுத்தியிருந்தது.

இயேசுவின் சீடர்களைத் தொடர்ந்து திருத்தந்தையர்களும் மரியியல் சிந்தனைகளை அவ்வப் போது போதித்துள்ளனர். புனிதர்களாகிய ஜஸ்டின்,ரேனியுஸ், தெர்த்துலியன், அலெக்ஸான் டிரியா கிளமெந்து, ஓரிஜன், நீசாநகர கிரகோரி, அம்புரோஸ், அகுஸ்தினார், ரேணிமுஸ் போன்றோரின் மரியியல் சிந்தனைகள் மேரிமாதாவின் வணக்கத்துக்கு மேலும் மெருகூட்டுவதாக அமைந்தன.

**மரியாவைப் பற்றிய விசுவாசக் கோட்பாடுகள்**

மேரிமாதா பற்றி எத்தனையோ நம்பிக்கைகள் இருக்கின்ற போதிலும் நான்கு கோட்பாடுகள் விசுவாசக் கோட்பாடுகளாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளன. (1). இறைவனின் தாய் மரியா-கி.பி. 431, (2).என்றும் கன்னி மரியா-கி.பி. 553, (3).அமல உற்பவி மரியா-கி.பி.1854, (4).விண்ணுக்கு எடுத்துச் செல்லப்பட்ட மரியா-கி.பி.1950. இந்த நான்கில் காலத்தால் பழமையானதும் முதன்மையானதும் இறைவனின் தாய் மரியா என்னும் விசுவாசக்கோட்பாடேயாகும்.

தந்தையில்லாமல் கடவுளால் பிறக்க முடிந்தபோது, தாயில்லாமல் அவரால் பிறக்க முடியவில்லை. மேரி மாதாவால் கடவுள் மகிமைக்குள்ளானர் என்பதல்ல பொருள். மகிமை பொருந்திய கடவுளை ஈன்றெடுத்ததால் மேரி மாதா இறைவனின் தாயாகும் பேறுபெற்றார் என்பதே கத்தோலிக்க விசுவாசம்.

அன்னை மரியாளுக்கு ஆயிரம் சிறப்பியல்புகள் இருந்தாலும் இறைவனின் தாய் என்பதே கிறிஸ்துவின் தாய்க்கு மகிமை சேர்ப்பதாக உள்ளது.

மரியா எவ்வாறு இறைவனின் தாய் என்று அழைக்கப்பட்டார் என்பதன் வரலாற்றை நோக்குவோம்: கி.பி. 5 நூற்றாண்டில் நெஸ்டோரியஸ் என்னும் கான்ஸ்டாண்டி நோபிளின் ஆயர் 429 ஆம் ஆண்டு ஓர் ஞாயிற்றுக்கிழமை மறையுரையில் அன்னை மரியாளைப்பற்றி ஒரு தப்பறைக் கொள்கையைப் போதித்தார்.

இயேசுவில் இரண்டு ஆள்கள் இருக்கிறார்கள், மனித இயேசு ஒன்று, தெய்வீக இயேசு இன்னொன்று. அவரைப் பொறுத்தவரையில் மரியாள் பெற்றெடுத்தது மனித இயேசுவைத்தான். எனவே அவள் இயேசுவின் அன்னை என்றுதான் அழைக்கப்பட வேண்டுமே தவிர கடவுளின் தாய் என்று அழைக்கப்பட முடியாது. இயேசு மரியாவிடமிருந்து பிறக்கும்போது சாதாரண மனிதராகத்தான் பிறந்தார். பின்னர் தம் வாழ்க்கைக் காலத்தில் கடவுளாக மாறினார் என்று கூறினார்.

ஆனால் அதுவரை கத்தோலிக்கத் திருச்சபையின் போதனை இயேசு ஒரே ஆள்தான். ஆனால் அவரிடத்தில் இரண்டு தன்மைகள் இருந்தன. ஒன்று மனிதத்தன்மை, மற்றொன்று தெய்வீகத்தன்மை. நெஸ்தோரியசின் இந்தப் போதனை மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இதனை ஒட்டி எபேசில் ஆயர் அலெக்ஸான்டரியா ஆயர் சிரில் தலைமையில் நடைபெற்ற திருச் சங்கத்தில் நெஸ்டோரியஸ் மற்றும் அவருடைய போதனை கண்டனம் செய்யப்பட்டது. கி.பி. 431 ஆம் ஆண்டு யூன்ரூபவ் 07-31 ஆம் திகதி வரை நடைபெற்ற எபேசு திருச்சங்கம் மரியா கடவுளின் தாய் என்று அறுதியிட்டு உறுதிபட பிரகடனம் செய்தது.

இத் திருச்சங்கத்தில் இயேசு இறை மற்றும் மனித இயல்புகளைக் கொண்ட ஒரே ஆள் என மீண்டும் பிரகடனம் செய்யப்பட்டது. அதாவது மரியா கடவுளாகிய இயேசுவைப் பெற்றெடுத்ததால் கடவுளின் தாய் என்றே அழைக்கப்பட வேண்டும்.

இந்த அறிவிப்பைக் கேட்ட எபேசில் கூடியிருந்த மக்கள் ஆர்ப்பரித்து இறைவனையும் அன்னை மரியாளையும் போற்றினர். இயேசு கடவுளின் மகன் மட்டுமல்ல. இயேசு கடவுள் ஆவார். இயேசு கடவுள் என்றால் மரியா கடவுளின் தாயே. தாய் அன்பை உலக மொழிகளில் எடுத்துரைக்க போதிய வார்த்தைகளே இல்லை.

இதனை இந்த சின்ன சம்பவம் எடுத்து விளக்கும் என்று நினைக்கின்றோம். தாயும் குழந்தையும் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த வேளை கொடியதேள் தாயை கொட்டி விடுகிறது. சடரென கண்விழித்த தாய் நல்லவேளை

தொடர்ச்சி ▼



# இறைவனின் தாயின் திருவிழா இன்று...!

தொடர்ச்சி▲

தேள் என் குழந்தையை கொட்டவில்லை. என்று குழந்தையைத் தூக்கி அன்பு முத்தம் பகிர்ந்தாள். இதுதான் அன்னையின் தாயன்பு.

ஆசைப்பட்ட எல்லாவற்றையும் பணமிருந்தால் வாங்கிவிடலாம். ஆனால் அம்மாவை வாங்க முடியுமா? என்கிறது ஒரு சினிமாப் படல் வரி. அதையே புனித ஆகுஸ்தினார் ஒரு மனிதனின் உடலில் உள்ள உறுப்புகள் எல்லாம் நாக்குகளாக மாறினும் மேரிமாதாவை அவருடைய தாய்மைக்கு ஏற்றவாறு புகழ முடியாது என்கின்றார்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம், இறைவன–ின் தாய் கத்தோலிக்க திருச்சபையில் .ரண்டாம் வத்திக்கான் சங்கம் மிக முக்கியமானது. இந்த சங்கத்தில் திருச்சபை என்ற ஏடு மரியாவின் தெய்வீகத் தாய்மையை முன்வைப்பதற்கு ஒரு முக்கியக் காரணம் இறைவனின் அன்னை என்ற பழைய மறைபொருளில் திருச்சங்கம் ஒரு புதிய உண்மையைக் கண்டது. மரியாவின் தெய்வீகத் தாய்மை உருவகத்தில் திருச்சபையே ஓர் அன்னையாகிறது. பைபிளில் யோவான் நற்செய்தியை எழுதிய யோவான, மேரிமாதாவை சீடர்கள் குழுவின் ஓர் அங்கமாகவே காண்கின்றார். அதன் பொருள் உலகெல்லாம் ஆள்பவரை பெற்றெடுத்தார் மேரிமாதா. திருச்சபையை உலகை வழிநடத்தும் கிறிஸ்துவைத் தொடர்ந்து ஈன்றெடுக்கின்றது என்கின்றார் ஹிப்போலிட்டஸ். புனித அகுஸ்தினார் கிறிஸ்துவின் சகோதரர்களைப் பெற்றெடுக்கும் திருச்சபை மேரிமாதா போன்று கன்னி அன்னை என்று வலியுறுத்துகின்றார்.

மேரிமாதாவின் தாய்மை தூய ஆவியால் உருவானது. இயேசுவின் இறை இயல்பும் மனித இயல்பும் பிரிக்க முடியாத அளவுக்கு மேரிமாதாவால் ஒன்றானது. இறைவன் ஒரு பெண் வயிற்றில் கருவானார் என்பது மனித குலத்துக்கு இறை அந்தஸ்து உயர்கிறது. இவர் மீட்பரின் அன்னையாகவும் எவரையும் மிஞ்சும் முறையில் ஆண்டவரோடு தாராளமாக ஒத்துழைத்த துணையாளராகவும் தாழ்மை கொண்ட அடியாராகவும் விளங்குகின்றார்.

கிறிஸ்துவைக் கருத்தாங்கி பெற்றெடுத்துப் பேணி வளர்த்தார், கோவிலில் கடவுளுக்கு அர்ப்பணித்து இறுதியாகச் சிலுவையில் உயிர் விடும் தம் மகனோடு மேரிமாதாவும் துன்பப்பட்டார். எனவே மனிதருக்கு அருள் வாழ்வைப் பெற்றுத்தர கீழ்ப்படிதல், விசுவாசம், அன்பு போன்ற நற்குணங்களால் நிறைவாழ்வுச் செயலில் மிகச்சிறப்பாக ஒத்துழைத்தவர். அருள் வாழ்வில் மேரிமாதா தாயாக அமைந்துள்ளார். ஆராதனை கடவுளுக்கு மட்டும்தான். மற்ற வணக்கங்கள் புனிதர்களுக்கு. இவ் வழிபடையில் மேரிமாதா கிறிஸ்துவின் தாயும் இறைவனின் தாயுமாக இருப்பதால் அவருக்குச் சிறப்பான வணக்கம் செலுத்தப்படுகின்றது என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுகின்றது.

பைபிளில் மேரிமாதா இறைவனின் தாய் இறைவனின் தாய் மேரிமாதா என்னும் கோட்பாட்டுக்கு நிறைய பைபிள் ஆதாரங்கள் உள்ளன. பைபிளில் நற்செய்தி நூல்களை எழுதிய நான்கு நற்செய்தியாளர்களும் மேரிமாதா இறைவனின் அன்னை என குறிப்பிடுகின்றனர். மேற்கோள்கள் சில மத்தேயு 2:18, 2:11, 12:46, 13:55, மாற்கு 3:31, லூக்கா 2:34, 48, 51, 8:19, யோவான் 2:5, 19:25 மேரிமாதா இறைவனுடைய மிகப்பெரிய கொடை.

மேரிமாதாவுக்கு எதிராகத் தற்காலத்தில் பலவாறான போதனைகள் பரப்பப்படுகிறன. அந்த போதனைகள் போலிகளால் சோடிக்கப்படுபவை. அவற்றை அடையாளம் கண்டு கொள்வோம்.மேரிமாதா விடியலின் பொழுது. சத்தியத்தின் சாகாவரம். எங்கள் பாவ இருளில் வெளிச்சநிலா. தரணிக்கு வந்த பொழுதுதான் பூமி தன்னைப் புதுப்பித்துக் கொண்டது. ஆண்டவரின் தூதில் ஆனந்தம் கண்டவள். ஆண்டவரை தனக்குள்ளே கொண்டவள். ஆகட்டும் என்றதால் ஆண்டவனின் தாயானவள். மழலையை உறங்கவைக்கும் தாலாட்டுடில் பூமியே விழிப்பதற்கான பூபாளம் பாடியவள். ஆண்டவனை அழிக்க அரசன் ஏரோது துரத்தி வருகிறான் என்று கேள்விப்பட்டதும் துள்ளி எழுந்து கையில் ஒளியை ஏந்தி இருளைத் துரத்தியவள். பாதுகை இல்லாத பாதங்களோடு நடந்தவள். அன்றே தொடங்கியது மேரிமாதாவின் மீட்பின் புனிதப் பயணம். வெளிச்சத்தின் விலாசம் எகிப்துக்கு வந்து நின்றது.

ஆகாயத்தை அழிப்பதற்குத் தூசிகள் துரத்த முடியுமா எனச் செயற்பட்டுத் தன்னை இறைத் திட்டத்துக்கு முழுமையாக அர்ப்பணித்தவள். அந்த முழுமையான அர்ப்பண வாழ்வே அவரை உலகுக்கு இறைவனின் தாய், நம் அனைவரின் தாயாகத் திருச்சபை நமக்கு பறைச்சாற்றுகின்றது. மேரிமாதாவின் சீடத்துவம் நம் தனி மனித வாழ்வில் இறை மனித உறவிலும் ஒன்றித் திருக்க வழிகாட்டுகிறது. இறைவன் இயேசுவை தனது உதிரத்திலே கொண்டிருந்த மேரிமாதா உலகுக்குக் கொடையாக அளித்தாள். அதைப் போல இறைவனை உலக மக்களுக்கெல்லாம் நாம் வழங்க வேண்டும்.

மேரி மாதாவைப் போல நாமும் அருள் மிக்கவர்களாய் வாழ்வோம். அப்பொழுது கையில் ஒளியை ஏந்தி இருளைத் துரத்திய மேரிமாதா கடவுளின் அன்னை என்னும் இத் திருவிழா அர்த்தம் நிறைந்ததாக மாறும்.

# ‘புதுவருடம் - 2025’ சிறப்பிதழ்



## பிறக்கும் வருடம் சிறக்கட்டும்!

பிறக்கும் வருடம் சிறக்க...
மனத்தால் இறையை வேண்டிடுவோம்
அடக்கும் ஆணவம் அகல
அகத்தால் இறையை வேண்டிடுவோம்

தொடக்கும் காரியம் துலங்க
துதித்தே இறையை வேண்டிடுவோம்
நலமும் வளமும் பெருக
நாளும் இறையை நாடிடுவோம்

உற்றார் உறவின் இணக்கம்
உயர்வாய் இருக்க வேண்டிடுவோம்
கற்றார் பெருக நாட்டில்
கருதி இறையை வேண்டிடுவோம்

பசியும் பிணியும் அகல
பாங்காய் இறையை வேண்டிடுவோம்
அறிவும் தெளிவும் பிறக்க
அன்பாய் இறையை வேண்டிடுவோம்

போரின் எண்ணம் தொலைய
பொறுப்பாய் இறையை வேண்டிடுவோம்
வாதம் புரியும் கூட்டம்
மறைய இறையை வேண்டிடுவோம்

ஏழை என்னும் சொல்லை
இகத்தில் அகற்ற வேண்டிடுவோம்
கோழை என்னும் சொல்லை
குவலயம் அகல வேண்டிடுவோம்

வேலை இல்லை என்னும்
வேதனை போக்க வேண்டிடுவோம்
இருக்கும் தொழிலை நன்றாய்
பெருக்க இறையை வேண்டிடுவோம்

நல்ல தலைமை எழுந்து
நாட்டை ஆள வேண்டிடுவோம்
சொல்லும் சொல்லை காக்க
தூய தலைமை வேண்டிடுவோம்

கொள்ளை அடிக்கும் தலைமை
குழியுள் விழ வேண்டிடுவோம்
வல்ல தலைமை நாட்டில்
வளர இறையை வேண்டிடுவோம்

பொய்மை உரைக்கும் கூட்டம்
பொசுங்க இறையை வேண்டிடுவோம்
வாய்மை என்னும் வசந்தம்
வாய்க்க இறையை வேண்டிடுவோம்

தாய்மை போற்றும் எண்ணம்
தளரா இருக்க வேண்டிடுவோம்
காய்தல் உவத்தல் இன்றி
கருணை பெருக வேண்டிடுவோம்

அன்பும் அறனும் வாழ்வில்
அமைய அனைவரும் வேண்டிடுவோம்
அதர்மம் அசுத்தம் வாழ்வில்
அகல அனைவரும் எண்ணிடுவோம்

துன்பம் துயரம் போக
என்றும் இறையை வேண்டிடுவோம்
குன்றா மகிழ்வே நிறைய
நன்றாய் இறையை வேண்டிடுவோம்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,**
**மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.**

# ‘புதுவருடம் - 2025’ சிறப்பிதழ்



## ஜுபிலி ஆண்டில் அனைவருக்கும் ஆசீர்வாதங்கள் கிடைக்க வேண்டும்

### மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை

புதிய ஆண்டு பிறக்கும் போதும், நாங்கள் வாழும் சூழலில் எத்தனையோ போர்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதனால் மக்கள் கொல்லப்படுகின்றனர். அனாதைகளாக இடம் பெயர்கின்றனர்.

இந்த அனர்த்தங்கள் நீங்கி ஜுபிலி ஆண்டில் உங்கள் அனைவருக்கும் ஆசீர்வாதங்கள் கிடைக்க வேண்டும்.

இவ்வாறு மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2025 ஆம் ஆண்டு எங்களுக்கு புத்தாண்டாகப் பிறக்கிறது. இயேசு நாதர் பிறந்து 2025 ஆண்டு நிறைவேறுகின்றது என்பதை உணர்ந்து இந்தப் புத்தாண்டை அன்புடன் வரவேற்போம்.


நாங்கள் வாழும் சூழலில் எத்தனையோ போர்கள் நடந்து கொண்டிருக்கின்றன. உக்ரைன் நாட்டுக்கு எதிராக ரஷ்யா போராடிக் கொண்டு இருக்கிறது. ஸ்ராயல் பாலஸ்தீனத்துக்கு எதிராகக் காஸாவில் போர் இடம் பெறுகின்றது. இந்த போரின் போது அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றனர். தமது உடைமைகளை இழக்கின்றார்கள். பாரிய துக்கத்துடன் அவர்கள் வேறு இடங்களுக்கு பாதுகாப்பு தேடிச் செல்கின்றனர். அவர்கள் எல்லாம் அனாதைகள் போல் பல இடங்களில் கூடி இருக்கிறார்கள்.

இந்த நிலையில் பிறந்துள்ள புத்தாண்டு 2025 ஆம் ஆண்டு திருத்தந்தை பாப்பரசர் பிரான்சிஸ்ஸால் யூபிலி ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டது.

அந்த யூபிலி ஆண்டின் ஆசீர்வாதங்கள் உங்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

பிறந்துள்ள 2025 ஆம் ஆண்டு உங்கள் அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சியான எதிர்பார்ப்பு தரக்கூடிய ஒரு ஆண்டாக அமைய வாழ்த்துகிறேன்.- என்றுள்ளது.

# ‘புதுவருடம் – 2025’ சிறப்பிதழ்



# நாட்டின் சவால்களை இனங்கண்டு எதிர்காலத்தை வலுப்படுத்துவோம்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் புத்தாண்டுச் செய்தியில் தெரிவிப்பு

நமது தாய்நாடு தற்போது எதிர் கொள்ளும் சவால்களைச் சரியாக அடையாளம் கண்டு, அவற்றை வெற்றி கொள்ளத் தேவையான ஆற்றல், வலிமை மற்றும் தொலை நோக்குடன் செயற்பட புது வருடத்தில் நாம் அனைவரும் உறுதி பூண வேண்டும். இலங்கை தேசத்தை கட்டியெழுப்புவதற்கான திட்டத்தை நாம் மேலும் வலுப்படுத்த வேண்டும். நமது நாட்டின் தற்போதய சவால்களை சரியாக அடையாளம் கண்டு எதிர்காலத்தை வலுப்படுத்துவோம்.

இவ்வாறு புத்தாண்டுச் செய்தியில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

புத்தாண்டுச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த காலத்தைப் போல் குறுகிய இன, மத கருத்துக்களால் பிளவுபட்ட அரசியல் திட்டங்கள் மீண்டும் தலை தூக்காமல் இருப்பது மிக முக்கியம். அத்துடன் கடந்த நான்கு வருடங்களாக நாட்டு மக்கள் எதிர்கொண்ட நிச்சயமற்ற தன்மை, ஏமாற்றங்களை முடிவுக்குக் கொண்டுவந்து, மக்கள் தாய்நாட்டில் தங்கியிருக்க ஏதுவான பொருளாதார, அரசியல், சமூக சூழலை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும்.

இதில் நாம் செய்ய வேண்டியது அமைதியின்மையை இல்லாதொழித்து நிம்மதியை வெற்றி பெறச்செய்வதற்கான பாதையை சரியாக தெளிவுபடுத்திக் கொள்வதாகும்.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியால் சிதைந்துள்ள வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப புதிய பொருளாதார திட்டமும் செயல்முறையும் தேவை என்பது மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது.

எனவே நாட்டின் எதிர்காலத்துக்காக அரசியல், சமூக மற்றும் பொருளாதார முன்னெடுப்புகளை வலுப்படுத்த புது வருடத்தில் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.–என்றுள்ளது.

# ‘புதுவருடம் – 2025’ சிறப்பிதழ்




# இந்த ஆண்டு வடக்கு மக்களுக்கு முன்னேற்றம் கொண்டு வரட்டும்!

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் புத்தாண்டுச் செய்தியில் தெரிவிப்பு

புத்தாண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த வேளையில், அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு வடக்கு மக்கள் ஒவ்வொருவருக்கும் முன்னேற்றத்தைக் கொண்டுவரட்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண அளுநர் நா. வேதநாயகன் புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

புத்தாண்டு என்பது தனியே கொண்டாட்டத்துக்கான நேரம் மட்டுமல்ல எங்கள் சிந்தனைகளை புதுப்பித்தலுக்கான தருணமும் கூட.

மகிழ்வுடன் வரவேற்கும் புதிய ஆண்டில் ‘முறைமை மாற்றத்தை’ நாம், எம்மில் ஒவ்வொருவரிடம் இருந்தும் ஆரம்பிக்க வேண்டும் என்று விரும்புகின்றேன்.

எங்கள் நிர்வாகத்தின் முதுகெலும்பாக, மக்களின் நம்பிக்கையை வளர்ப்பதிலும் அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் சேவைகளை வழங்குவதிலும் அரச பணியாளர்கள் ஒவ்வொருவரதும் அர்ப்பணிப்பும் தொழில் முறையும் மிக முக்கியமானவை.

நேர்மை, செயல்திறன் மற்றும் பொறுப்புணர்வோடு உங்கள் விலை மதிப்பற்ற சேவைப் பங்களிப்புகளைத் தொடர வேண்டும் என அன்புரிமையுடன் கோருகின்றேன்.

பொதுச் சேவையில் மிக உயர்ந்த தரங்களை நிலை நிறுத்த நாங்கள் ஒன்றாகப் பாடுபடுவோம். எங்கள் மக்கள் அனைவருக்கும் வளமான எதிர்காலத்தை உருவாக்க அயராது உழைப்போம்.

புதியஆண்டில்இருந்துஎங்கள்பொதுச் சேவையை அன்பானதும், விரைவானதும், தரமானதுமாக மாற்றுவதற்கு நாம் ஒவ்வொருவரும் உறுதிபூண்டு ‘முறைமை மாற்றத்தை’ ஆரம்பிப்போம்.

இந்த ஆண்டை எமது மாகாணத்துக்கு, ஒரு குறிப்பிடத்தக்க இலக்கை அடைவதற்கான ஆண்டாக மாற்ற, அரசியல் தலைமைத்துவத்தில் உள்ளவர்கள் – அரச பணியாளர்கள் – மக்கள் என நாம் அனைவரும் ஒற்றுமையுடன் பயணிப்போம்.– என்றுள்ளது.

# ‘புதுவருடம் – 2025’ சிறப்பிதழ்



# வாழ்வில் வெற்றிகள் நிறைந்த ஆண்டாக திகழ வேண்டுகிறேன்!

## புது வருட வாழ்த்து செய்தியில் பிரதி அமைச்சர் பிரதீப்

இன்று பிறந்துள்ள புத்தாண்டு வாழ்வில் வெற்றிகள் நிறைந்த ஆண்டாக ஒவ்வொருவருக்கும் திகழ வேண்டு கிறேன்.

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சருமான சுந்தரலிங்கம் பிரதீப் புது வருட வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

மலர்ந்த புது வருடம், இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் அமைதியும் மகிழ்ச்சியும் ஆரோக்கியமும் வழங்க வேண்டும்.

நிறைந்த செழிப்பான ஆண்டாகவும், மனிதநேயம் முதன்மை பெற்று “வளமான நாடு, அழகான வாழ்க்கை” அனைவருக்கும் கை கூட வேண்டும்.

இந்த ஆண்டு வாழ்வில் வெற்றிகள் நிறைந்த ஆண்டாக ஒவ்வொருவருக்கும் திகழ எனது உளமார்ந்த புது வருட நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வ தில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். – என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ‘புதுவருடம் – 2025’ சிறப்பிதழ்



# மலையக மக்களின் எண்ணங்கள் யாவும் வண்ணங்களாய் இன்பம் நிறையட்டும்!

## புதுவருட வாழ்த்துச் செய்தியில் இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

புதிய நம்பிக்கைகளுடன் மலர்கின்ற இந்த புத்தாண்டில் மக்கள் அனைவருக்கும் இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது புத்தாண்டுச் வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மலையக மக்களின் நலன் கருதி புதிய அரசுடன், புதிய பாதையில் அனைவரும் ஓரணியில் பயணிப்போம்.

மக்கள் அனைவருக்கும் இந்தப் புத்தாண்டு, புதிய நம்பிக்கையையும் எழுச்சியையும் மலர்ச்சியையும் வளர்ச்சியையும் வழங்கும் ஆண்டாக மலரட்டும் .

அத்தோடு, மலையக மக்களின் எண்ணங்கள் யாவும் வண்ணங்களாய் மாறி இன்பம் நிறையும் இனிய வருடமாக மாறும்.

மலரும் புத்தாண்டு நீங்காத வளங்களையும், நிறைவான மகிழ்ச்சி மற்றும் மன உறுதியை தரும் ஆண்டாக அமைந்திட மனமார்ந்த வாழ்த்துகளை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.– என்றுள்ளது.

# ‘புதுவருடம் – 2025’ சிறப்பிதழ்



# நாம் மலையக மக்களுக்கு எப்போதும் கை கொடுப்போம்

## நுவரெலியா எம்.பி. ஜீவன் புத்தாண்டுச் செய்தியில் தெரிவிப்பு

2025 ஆம் ஆண்டு நம்பிக்கை நிறைந்த ஆண்டாகத் திகழட்டும். மலையக மக்களின் தேவைகளிலும், அவர்களது முயற்சிகளிலும் நாம் எப்போதும் கை கொடுப்போம்.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் விடுத்துள்ள புது வருட வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

புதுவருட பிறப்பை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிறக்கும் ஒவ்வொரு புத்தாண்டும் மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் தரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஒவ்வொருவருக்குள்ளும் உண்டு.

மலையக சமூகத்தின் மாற்றத்துக்காகவும், ஏற்றத்துக்காகவும் தம்மை அர்ப்பணித்திருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எத்தனை சவால்களை எதிர்கொண்டாலும் இடைவிடாது மக்களுக்காக பாடுபடும்.

எமது மலையக மக்கள் இடர்களை எதிர்கொள்ளும் போதும், சவால்களை சந்திக்கின்ற போதும் அரணாகப் பாதுகாத்து நின்று துயர்களையும் துடைத்து வந்திருக்கின்றோம். வரலாற்றுப் பணியை நாம் மேற்கொண்டிருப்பதை வரலாறு சான்றுபடுத்தும். இதன் காரணமாகவே, தெளிந்த சிந்தனையோடும் கொள்கைப் பற்றோடும் மக்கள் எம் பின்னால் அணிவகுத்து நிற்கின்றனர்.

இன்று எமது மக்கள் அனைவருக்கும் சலுகைகள், உரிமைகள், வசதி வாய்ப்புகள் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அத்தனையும் அரசியல் சாணக்கியத்தாலும், தொழிற்சங்க போராட்டங்களாலும் பெறப்பட்டவை என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

2025 ஆம் ஆண்டு நம்பிக்கை வலுவூட்டும் ஆண்டாகவும் மலையக மக்களின் தேவைகளை நிறைவேற்ற வழிகாட்டும் ஆண்டாகவும் திகழவேண்டும்.

இந்த மக்களின் தேவைகளிலும், அவர்களதுமுயற்சிகளிலும்நாம்கைகொடுப்போம். புதிய ஆண்டில் மலையகம் எங்கும் மகிழ்ச்சி பரவட்டும்.

இதேவேளை இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள். இவர்களின் எதிர்பார்ப்புகள், விருப்பங்கள், வாஞ்ஜைகள் இவ்வாண்டிலேயே நிறைவேற்றப்பட வேண்டும். இந்த ஆண்டு இளைஞர்களுடைய ஆண்டு. புதிய சகாப்தத்தைப் படைக்கப் போகும் இந்த அரசு இளைஞர்களின் எண்ணங்களை நிறைவேற்றி நம்பிக்கை வலுவூட்டும் ஆண்டாக இந்த ஆண்டை நாம் எதிர்பார்க்கின்றோம்.

இளைஞர்கள் மத்தியில் புதிய யுகத்தைப் படைக்கப் போவது உறுதி. வரலாற்றில் இளைஞர்கள் இந்தப் புத்தாண்டில் தவறு இழைக்கக் கூடாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். உங்களுக்கும் உங்கள் குடும்பதுக்கும் இப் புத்தாண்டு சிறப்புடன் மலர்ந்து, ஒளிமயமான எதிர்காலம் அமைய எனது வாழ்த்துக்கள்.– என்றுள்ளது.

## ‘புதுவருடம் – 2025’ சிறப்பிதழ்



# பிறக்கும் புத்தாண்டு இலங்கை மக்களுக்கு சம உரிமையையும் அந்தஸ்தும் வழங்கட்டும்

### புத்தாண்டுச் செய்தியில் முன்னாள் எம்.பி. ரமேஸ்வரன் தெரிவிப்பு

பிறக்கும் புத்தாண்டு இலங்கை மக்களுக்கு சம உரிமையையும் சம அந்தஸ்தையும் வழங்கி நாட்டு மக்கள் அனைவருக்கும் சிறந்த வாழ்க்கை சூழலை ஏற்படுத்தும் ஆண்டாக அமைய வேண்டும்.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் விடுத்துள்ள புது வருட வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

புதுவருட பிறப்பை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பஞ்சம், பசி, பட்டினி என்பவற்றுக்கு விடிவு தேடி புதிய வாழ்வின் ஏக்கங்களை கண்களில் சுமந்து இலங்கை வந்து குடியேறிய இந்திய வம்சாவழி தமிழ் மக்கள் உழைப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்டு வாழ்வின் இருள் நீக்கி ஒளி பெற்ற ஒரு பெரும் சமுதாயமாக, வரலாற்று மாற்றத்துடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்த நாட்டின் சகல முன்னேற்றத்துக்கும் இந்திய வம்சாவளி மக்கள் தமது பங்களிப்பைப் பெருமளவிலே செலுத்தியிருக்கின்றார்கள்.

உழைக்கும் வர்க்கமாகிய தோட்ட தொழிலாளர்கள் இந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக இருந்து வருகின்றார்கள். எந்தவொரு கால கட்டத்திலும் இந்த நாட்டுக்கு உழைப்பாளிகளாக இருந்திருக்கின்றார்களே தவிர இந்த நாட்டுக்கு எந்தவிதமான பாதகத்தையும் ஏற்படுத்தியதில்லை.

இவர்கள் இதுவரையிலும் அனைத்து உரிமைகளையும் பேரம் பேசும் சக்திகளால்தான் பெற்றிருக்கின்றார்கள். எனவே இந்த புதிய வருடத்தில் சகல உரிமைகளுடனும் வாழ்வதற்கும், அதேபோல் மக்கள் வாழ்க்கையில் இவர்களின் நியாயமான கோரிக்கைகளை அனைவரும் நிறைவேற்றுவதற்கு ஒன்றிணைந்து உழைப்போம்.


நமது பலம், ஒற்றுமை என்பவற்றை நிலை நிறுத்தி நாம் தலை நிமிர்ந்து ஏனையோருக்கு நிகராக வீறுநடை போட பிறக்கும் புத்தாண்டில் உறுதி கொள்வோம்.– என்றுள்ளது.

# பகிரங்க மன்னிப்பு கேட்ட மணிப்பூர் முதல்வர்; 2025 இல் அமைதி திரும்பும் என நம்பிக்கை

மணிப்பூரில் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக தொடரும் வன்முறைச் சம்பவங்களுக்காக அம்மாநில முதல்வர் பிரேன் சிங் பொதுமக்களிடம் வருத்தம் தெரிவித்து, பகிரங்கமாக மன்னிப்பு கோரியுள்ளார்.

அதேவேளையில், 2025 ஆம் ஆண்டுக்குள் மணிப்பூரின் இயல்பு நிலை திரும்பும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு மாநிலமான மணிப்பூரின் இம்பால் பள்ளத்தாக்கில் பெரும்பான்மையாக வசிக்கும் மைத்தேயி சமூகத்தினருக்கும், அதையொட்டிய மலைப் பகுதிகளில் வசிக்கும் குகி பழங்குடியினருக்கும் இடையே கடந்த ஆண்டு மே 3 ஆம் திகதி மோதல் ஏற்பட்டது. இது இனக் கலவரமாக மாறியதில் 200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். ஒன்றரை ஆண்டுகளாக அங்கு வன்முறை தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்தப்



பிரச்சினைகளில் மத்திய, மாநில அரசுகள் மீதான எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளும் தொடர்கின்றன.

இந்நிலையில், நேற்று இம்பாலில் செய்தியாளர்களிடம் பேசிய மணிப்பூர் முதல்வர் பிரேன் சிங்,

“கடந்த ஆண்டு மே மாதம் 3 முதல் இன்று வரை நடந்த அனைத்து சம்பவங்களுக்காகவும் நான் வருந்துகிறேன். இந்த ஆண்டு மிகவும் துரதிர்ஷ்டவசமானது. பலர் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்துள்ளனர். பலர் வீடுகளை விட்டு வெளியேறினர். நான் உண்மையிலேயே இந்த விஷயத்துக்காக வருத்தப்படுகிறேன். அதோடு நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். ஆனால் இப்போது, கடந்த மூன்று, நான்கு மாதங்களில் இம்மாநிலம் அமைதியை நோக்கி சென்று கொண்டுள்ளது. இதனால் 2025-ஆம் ஆண்டுக்குள் மணிப்பூரின் இயல்பு நிலை திரும்பும் என்று நம்புகிறேன்.

இதுவரை ஏறத்தாழ 200 பேர் இறந்துள்ளனர். சுமார் 12,247 எஃப்.ஐ.ஆர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 625 பேர் பல்வேறு குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்டுள்ளனர். வெடிபொருட்கள், ஆயுதங்கள், வெடிமருந்துகள் உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினையை கையாள்வதில் நல்ல முன்னேற்றம் உள்ளது. இம்மோதலில், இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு புதிய வீடுகளை கட்டித்தர போதுமான நிதியை மத்திய அரசு வழங்கியுள்ளது.” -என்றார்.

# தமிழக மக்கள் நிம்மதியாக வாழும் சூழலை ஏற்படுத்த ஓயாது உழைப்போம்

## இ.பி.எஸ். புத்தாண்டு வாழ்த்து



“தமிழ்நாட்டில் அனைத்து நிலைகளிலும் வாழும் மக்கள் நிம்மதியான வாழ்க்கையை வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்துவதற்கு, நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம். ஓயாது உழைப்போம்.”

– இவ்வாறு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“புத்தம் புது நம்பிக்கைகளுடன் மலருகின்ற இந்தப் புத்தாண்டில், தமிழக மக்கள் அனைவருக்கும் என் இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலங்களில், மக்கள் நலன் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு பல்வேறு முத்தான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதோடு, மக்கள் எவ்வித அச்சமுமின்றி நிம்மதியுடன் வாழ்ந்து வந்ததை, இந்த நேரத்தில் பெருமிதத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் அனைத்து நிலைகளிலும் வாழும் மக்கள் நிம்மதியான வாழ்க்கையை வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்துவதற்கு, நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம். ஓயாது உழைப்போம். பொற்கால ஆட்சியை தமிழ்நாட்டில் மீண்டும் அமைப்போம்என இந்நாளில் சபதமேற்போம்.

மக்கள் அனைவருக்கும் இந்தப் புத்தாண்டு, புதிய நம்பிக்கையையும், எழுச்சியையும், மலர்ச்சியையும், வளர்ச்சியையும் வழங்கும் ஆண்டாக மலரட்டும் என்று, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரது தூய வழியில் மனதார வாழ்த்தி, அனைவருக்கும் எனது உளங்கனிந்த ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக் கொள்கிறேன்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.



# கொலை மிரட்டல்: எஸ்.வி. சேகர் புகார்

தனக்கு தொலைபேசியில் கொலை மிரட்டல் விடுக்கப்படுவதாக தென் சென்னை பொலிஸ் கூடுதல் ஆணையர் கண்ணனிடம் நடிகர் எஸ்.வி.சேகர் புகார் மனு அளித்துள்ளார்.

பின்னர் இதுதொடர்பில் செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில்,

“தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, சவுக்கால் அடித்துக் கொண்டது தொடர்பாக என் கருத்தை சமூக வலைதளங்களில் பேசினேன். இதனால் எனக்கு கொலை மிரட்டல் விடுத்து நிறைய தொலைபேசிஅழைப்புகள் வருகின்றன. கொலை மிரட்டல் விடுத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரியுள்ளேன்.” – என்றார்.



# புத்தாண்டில் 809 கோடியாக உயர்ந்த உலக மக்கள் தொகை

உலக மக்கள் தொகை இன்று புத்தாண்டு தினத்தில் 809 கோடியாக (8.09 பில்லியனாக) இருக்கும் என்று அமெரிக்க மக்கள்தொகை கணக்கெடுப்புத்துறை அறிக்கை வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட அதன் அறிக்கையில், 2024ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை 71 மில்லியனாக காணப்பட்டது.

2023 ஆம் ஆண்டில் 75 மில்லியன் மக்கள் தொகை உயர்ந்த நிலையில் ககடந்த வருடம் (2024) மக்கள் தொகை 0.9 வீதம் குறைவாக உள்ளது.

மேலும் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒவ்வொரு செக்கனுக்கும் சராசரியாக 4.2 குழந்தைகள் பிறக்கும் என்றும் 2 பேர் இறப்பார்கள் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அமெரிக்காவைப் பொறுத்த வரைப் புத்தாண்டு தினத்தில் அமெரிக்க மக்கள் தொகை 341 மில்லியனாக இருக்கும்.

2025 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து அமெரிக்காவில் ஒவ்வொரு 9 செக்கனுக்கும் ஒரு பிறப்பும், ஒவ்வொரு 9.4 செக்கனுக்கும் ஒரு இறப்பும் ஏற்படவுள்ளன.

வெளிநாடுகளில் இருந்து குடியேற்றங்கள் அதிகரித்துள்ளதால் ஒவ்வொரு 23.2 செக்கனுக்கும் அமெரிக்க மக்கள் தொகையில் ஒருவர் கூடுதலாகச் சேர்வர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அமெரிக்காவின் திறைசேரி திணைக்களத்தின் கணினி கட்டமைப்பிற்கு இணையவழி தாக்குதல்

அமெரிக்காவின் திறைசேரி திணைக்களத்தின் கணினி கட்டமைப்பிற்கு இணையவழி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சீனாவின் அனுசரணையுடன் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அதேநேரம், மேற்படி திணைக்களத்தில் சேவையாற்றும் பல சேவையாளர்களது தகவல்கள் திருடப்பட்டுள்ளன என அந்த தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்தநிலையில், அதனைச் சீரமைப்பு பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.




# பிரித்தானியாவில் 130 பகுதிகளுக்கு மின் துண்டிப்பு எச்சரிக்கை விடுப்பு

பிரித்தானியாவில் 4 நாள்களுக்கு 130 பகுதிகளில் மின் துண்டிப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் நான்கு நாள்களுக்கு பரவலாக பனிப் புயல் எதிர்பார்க்கப்படுவதால், 130 பகுதிகளுக்கு மின் துண்டிப்பு மற்றும் போக்குவரத்து பாதிப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் நாளை வியாழன் வரை பனி, மழை மற்றும் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் பிரித்தானிய வானிலை மையம் மஞ்சள் எச்சரிக்கை அறிவித்துள்ளது.

இன்று ஸ்காட்லாந்தில் பனி அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பனி தெற்கு இங்கிலாந்தில் பரவுவதுடன், இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பகுதிகளில் கடுமையான காற்றும் கனமழையும் வீசும்.

வடக்கு இங்கிலாந்து நகரங்கள் போன்ற பகுதிகளில் 2-5 செ.மீ. பனியும், சில இடங்களில் 20-25 செ.மீ. உயரம் வரை பனியும் அடிக்கக்கூடும்.

மின் துண்டிப்புக்கு முன்னதாக, டார்ச், பேட்டரிகள், மொபைல் போன் பவர் பேங்க் மற்றும் பிற அத்தியாவசிய பொருள்களைசேகரித்துவைத்துக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 01.01.2025




இன்று மகிழ்ச்சியளிக்கு வகையில் எந்த நிகழ்வும் காணப்படாது. அமைதியாக இருப்பதும் ஆன்மீக ஈடுபாடும் சிறந்தது.

பணியிடத்தில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கட்டுப்பாடு இழப்பீர்கள். இதனால் விவாதம் ஏற்படும். இது இருவரிடையே காணப்படும் அன்பைப் பாதிக்கும்.

நிதி வளர்ச்சி பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. எதிர்கால தேவைக்காக ஒவ்வொரு பணமும் சேமிப்பது சிறந்தது.

கண்களில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று வேடிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் நாள். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை அணுகுமுறை பராமரிப்பீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாகவும் உங்களுக்கு சாதகமாகவும் காணப்படும். நீங்கள் சிறிது பணத்தைச் சேமிப்பீர்கள்.

இன்று நேர்மறையான ஆற்றல் உங்களிடம் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் அமைதியான சூழ்நிலை காணப்படும். அனுசரனையான மன நிலை காணப்படும்.

பணியிடச் சூழல் திருப்தியை அளிக்கும். நீங்கள் குறைவான முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் அணுகுமுறையில் அர்ப்பணிப்பு காணப்படும். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் குடும்பத்துக்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

பணியிடச் சூழலில் முன்னேற்றம் அவசியம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அதிக சொந்தம் கொண்டாடுவீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. எனவே எதிர் காலத்துக்காகச் சேமிக்க வேண்டும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது. காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நேர்மறையான ஒத்துப் போகும் மனநிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடச் சூழலில் பலன்கள் கலந்து காணப்படும். நீங்கள் திறம்படச் செயலாற்ற கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு பணத்தைப் பயன்படுத்தவும்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. பதற்றத்தைக் குறைத்து ஆரோக்கியத்தை பராமரியுங்கள்.




இன்று விழிப்புணர்வை பராமரிக்க வேண்டிய நாள். உங்கள் வீட்டில் சுப நிகழ்சிகள் ஏதாவது இன்று திட்டமிட்டிருந்தால் அதனை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது.

பணியைப் பொறுத்தவரை இன்று மும்மரமான நாள். சிறந்த செயல்திறனுக்கு நீங்கள் கூடுதல் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவு சுமூகமாக இருப்பது உங்கள் கையில் தான் உள்ளது.

நிதி வளர்ச்சி ஸ்திரமாக இருக்காது. நீங்கள் பணம் வீணாகாமல் தடுக்க சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும். ஒவ்வாமை காரணமாக தொண்டையில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். சாதகமான பலன்களை அளிக்கும். நீங்கள் திருப்தியை உணர்வீர்கள்.

நீங்கள் சகஜமாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த நேர்மறை போக்கின் காரணமாக உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பண வரவு காணப்படும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உறுதியும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்றைய விளைவுகளை எண்ணி வருத்தப்படுவதை விட அமைதியாக இருப்பது சிறந்தது. அதிர்ஷ்டமற்ற நிலையை சமாளிக்க நீங்கள் நம்பிக்கையுடன் இருப்பது சிறந்தது.

பணி சம்பந்தமான பயணம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பயணத்தின் போது தேவையற்ற பதற்றம் காணப்படும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனை எளிதாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று பண இழப்புக்கான சாத்தியம் உள்ளது. எனவே பணத்தைக் கையாளும்போது கூடுதல் கவனம் தேவை.

இன்று ஆரோக்கியமாய் இருக்க நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 01.01.2025




இன்றைய நாளை நன்கு செலுத்த நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டும்.

நீங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம் நன்மை பெறலாம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை இன்று சுமூகமாக இருக்காது. உங்கள் குடும்பததுக்காகப் பணம் செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம். என்றாலும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தைப் பாதிக்கும்.




இன்று நல்ல மாற்றங்கள் ஏற்படும். வருகின்ற வாய்ப்புகளை முறையாக பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பல நன்மைகளைப் பெறலாம்.

பணி மாற்றம் மற்றும் பணி சம பந்தமான பயணம் நேரலாம். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கலாம்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். உங்களின் உரையாடும் விதம் காரணமாக நல்ல சூழல் உருவாகும்.

நிதி நிலைமையைப் பொறுத்தவரை பலன்கள் கலந்து காணப்படும். வரவு - செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாக முடிப்பீர்கள்.

நீங்கள் திருப்தியான நிலையை உணர்வீர்கள். உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியும் நல்லுறவும் காணப்படும். உங்கள் துணையைப் பற்றி நேர்மறையான அன்பான எண்ணம் கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். இன்று சீரான நிதி நிலைமை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று ஒழுக்கமான போக்கும் மன உறுதியும் காணப்படும்.





ஒழுக்கமான வாழ்வு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை உயர்ந்து காணப்படும். நல்ல உறுதி காணப்படும்.

உங்கள் கடின உழைப்புக்கு பதவி உயர்வு கிடைக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வெற்றி கிட்டும். உங்கள் தொழிலில் சுறுசுறுப்பு காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். சேமிப்பும் உயரும். பயனுள்ள புதிய முதலீட்டுக்கு உகந்த நேரம்.

இன்று உங்கள் ஆற்றலும் உறுதியும் அதிகரித்து காணப்படும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




# ரயில் ஆசனங்களை முன்பதிவு செய்யும்போது தேசிய அடையாள அட்டை இலக்கம் கட்டாயம்

ரயில் ஆசனங்களை முன்பதிவு செய்யும்போது பயணியின் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு இலக்கத்தை உள்ளடக்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ரயில்வே திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசனங்களை முன்பதிவு செய்தவர்கள் ரயில் நிலையங்களுக்குள் பிரவேசிக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது ரயிலில் பயணச்சீட்டு பரிசோதனைக்குட்படுத்தப்படும் போது, அதில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு இலக்கத்தை பரிசோதித்து உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆசனங்களுக்கான பயணச்சீட்டுக்கு உரிய கட்டணத்தை மீளப்பெறும்போது அதன் உரிமையாளரின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக பயணியின் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டின் பிரதியை ரயில் நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.